தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 71
18.08.2024





# விவசாயத்தில் புதுமைகளை கொண்டாடும் இந்திரா குழுமம்




வரிக் கொள்கைகளும் பொருளாதார வளர்ச்சியும் 10




அழகுக்கலை என்பது ஆத்மாவின் பூரணமான வெளிப்பாடு 12



வீட்டிலிருந்து அலுவலக வேலை: தொழில் திறனை அதிகரிக்குமா? 16

# கவனிக்கப்படாத கள நிலைமைகள் மீண்டும் பரவும் டெங்கு

**உயரிய கவனம் எடுக்காது விட்டால் எதிர்வரும் மழைக் காலம் டெங்குத்தாக் கத்தால் சவால் மிக்கதாகவே அமையும். கிராமங்கள் எப்போதும் சுத்தம் சுகாதாரம் என அழகாகத்தான்இருக்கின்றன. நகர்ப்புற மக்களும் அரசியல் தலைவர்களும் பொறுப்பு மிக்க தலைவர்களும் அசமந்தப்போக்கோடும் சுடலைகளை அழகுபடுத்துவதிலே பெருமை கொள்கிறார்கள்.**





லதா கந்தையா

இலங்கையிலே ஜனாதிபதி தேர்தல் அமளிதுமளியாக களைகட்டிக்கொண்டிருக்கின்ற அதேவேளை எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் நாட்டின் பல பாகங்களிலே டெங்குநோய் தீவிரமடைந்து வருகிறது. கண்டியில் டெங்கு தீவிரமாகியுள்ளது. புத்தளம், நீர்கொழும்பு, முல்லைத்தீவு, இரத்தினபுரி, திருகோணமலை என மாவட்டத்திற்கு பத்துப் பேராவது டெங்குத்தாக்கத்துக்கு உள்ளாகிக்கொண்டு இருக்கிறார்கள்.

டெங்கு நுளம்பில் அதித விளைவுகளைப்பற்றி பேசுவதற்கு பொறுப்பு வாய்ந்த தலைவர்களிடம் நேரமில்லை. ஜனநாயகரீதியில் குடிமக்களிடமிருந்து வாக்குகளைப்பெற்றுவிட முண்டியடிக்கும் பதவிவெறி பிடித்த தலைவர்கள் மக்கள் நலன்சார்ந்த சுகாதார வாழ்வுக்கட்டமைப்பை பற்றி சிந்திக்கவில்லை.

பருவம் தப்பிய மழையும் மழைவீழ்ச்சிக்குறைவும்நுளம்புப்பெருக்கமும்அதனால் ஏற்படப்போகும் பெருந் தாக்கங்களும் நினைத்துப்பார்க்க முடியாத சவாலாக அமையவே வாய்ப்பு அதிகம் உலகிலே 3500 வகை நுளம்புகள் உள்ளதாக துறைசார்ந்த ஆராட்சியாளர்கள் ஆய்வு செய்துள்ளார்கள். ,நத நுளம்புகளின் ஒட்டு மொத்த குடித்தொகை கணக்கெடுப்பின்படி 7 றில்லியனுக்கு மேல்(மில்லியன் அல்ல) என ஆராட்சியாளர்கள் கணிப்பீடு செய்துள்ளார்கள். இந்த நுளம்புக்குடித்தொகை வகைப் பாட்டுக்குளே ஆறுவீதமானவை தான் கொடூரமானவ படைப்பிரிவினராக மக்களை அச்சுறுத்திக்

கொண்டிருக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் காடுகள் மேடுகள் மலைகள் சமவெளிகள் எங்கும் தேடிய லைத்து கண்டுபிடித்த தகவல்களே இவை. இன்னும் கண்டறியாத கூட்டத்தை சேர்ந்த நுளம்புப்படைகளும் இருக்கக்கூடும்.



இந்தபோர்க்குணமுடைய மூர்க்கத்தனமான நுளம்புகளே மனித உதிரத்தை சுவைத்துக்கொட்டி மலேரியா, டெங்கு, சிக்கன்கூனியா, மஞ்சள் காமாலை (Yellow fever) போன்ற நோய்களை பரப்புகின்றன. இந்த கொடிய நோய்களைப் பரப்புவது நுளம்புகளில் பெண்நுளம்புகள் என ஆராட்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். என்ன ஒரு வெறித்தனம்! ஆனால் இந்தப்பெண் நுளம்புகளிடும்முட்டைகளையும்அவற்றை பாதுகாத்து இனப்பெருக்கம் செய்யவும் உதவுபவை ஆண் நுளம்புகள் தானாம். அப்ப பாருங்க விளையாட்டை. நுளம்புகள் கூட பெண்களைத்தான் வில்லிகளாக்கிவிட்டு மறைமுகமாக தங்கள் சுயரூபங்களை மறைத்து விளையாடுகின்றன.

இந்த நுளம்புகளால் ஆதிகாலம்தொட்டே பல்வேறு வகையான தாக்கங்களும் இறப்புக்களும் நடைபெற்று வந்துள்ளது. இதனை அழிப்பதற்கு இன்றுவரை பல்வேறு வகையான மருந்துகளும் ஆராய்ச்சிகளும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் அவை காலத்துக்கு காலம் வெவ்வேறு வடிவத்தோடு பரிணாம வளர்ச்சி அடைகின்றனவே தவிர முற்றாக அழிவடைவதில்லை

1939 இல் சுவிஸ்நாட்டவரான பால் முல்லர் என்ற ஆராட்சியாளரால் னுனுவு என்ற நுளம்புக்கொல்லி மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பாவனையால் நுளம்புகள் அழித்தொழிக்கப்பட்டபோதும், அந்த மருந்து பறவைகளுக்கு ஆபத்தை தருவதாக கூறி 1972 இல் தடை செய்யவும் பட்டது.

இதனால் நுளம்பை அழிக்க மீண்டும் ஆராட்சிகள் முடிவிலியாக தொடருகின்றன.

அடுத்தகட்ட நடவடிக்கையாக நுளம்புகளை கதிர்வீச்சுக்களால் மலட்டுத்தன்மையை ஏற்படுத்த முயற்சித்தார்கள். தடை கிறீம்களை கண்டு பிடித்தார்கள். ஆனால் அதுவும் வெற்றியளிக்கவில்லை.

பின்புதான் விழிப்படைந்த மனிதகுலம் நுளம்பு வலைகளை கண்டுபிடித்தது நுளம்பு வலைகளை கண்டுபிடித்தபின் ஓரளவு மரணங்களை தடுக்கவும் முடிந்தது.

முன்பு பேய்க்காச்சல், குலப்பன் காச்சல் என மலேரியாவை அழைத்தனர். அப்போது



குளோரகுயின், பிரிமாக்குயின் என்ற மாத்திரைகள் பாவிக்கப்பட்டன.

அவற்றுக்கும் அவை அடங்கவில்லை. அதனால் பப்பாளி இலைச்சாறு, வேப்பம் பட்டைச்சாறு என அவித்து குடித்த போது ஓரளவு கட்டுப்படுத்தி நோயாளர்கள் குணமடைந்தனர். இவ்வாறான இயற்கை தடுப்பு மருந்தை பயன்படுத்தியவர்களை நுளம்புகளின் நோய்கள் நெருங்காதமை விசேட அவதானிப்பாகவும் காண முடிந்தது. உலகிலேயே மலேரியாவை முற்றாக அழித்த நாடாக இலங்கை தன்னை நிலை நிறுத்திக்கொண்டது.

அழிக்க அழிக்க படையெடுக்கும் நுளம்புகள் எப்படி மீண்டும் மீண்டும் வருகின்றன என ஆராய்ந்த போது நாட்டுக்குள் இடத்துக்கு இடம் நகரும் புகையிரங்கள், போக்வரத்து பேருந்துகள், பாரமேற்றிகள் பொருட்களை ஏற்றியிறக்கும் வாகன வியாபாரங்கள் , மனிதர்கள் எடுத்துச்செல்லும் பொருட்கள் மூலமாகவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கப்பல் போக்குவரத்து மூலமும் பரவுவதாக கண்டறிந்தனர்.

இந்த தகவல்களை வைத்து கடந்த சில வருடங்களுக்கு இந்தியாவில் இருந்து ரயிலை அன்பளிப்பாக தந்த பின்பு நாட்டில் திடீரென டெங்கு தீவிரமாக பரவியதையும் , இனிவரும் காலங்களில் இந்தியாவின் நாகபட்டினத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடம்பெற இருக்கும் கப்பல்சேவை தொடர் பிலும் சுகாதார மற்றும் நோய்க் காவிகள் நுளம்புத்தாக்கங்கள் தொடர்பில் அவதானத்தோடு செயற்பட வேண்டியது அனைவருடைய கடமையும் பொது மனப்பாங்குமாகும்.

தனித்தனி குடும்பங்கள் ஒவ்வொன்றும் பூரண சுகாதா நிலைமைகளை கடைப்பிடித்தால் கிராமம் தூய்மையாகும். நகரங்களும் ஆரோக்கியம் பெறும்.

அந்தவகையில்

1.நுளம்பு பெருகாதிருக்க வீட்டின் பீலிக்கை மழைநீர் தேங்க விடக்கூடாது,.

2.சிரட்டை, கோம்பையை எரியுத்தோ வெட்டி புதையுதைத்தோ விட வேண்டும்.

3.வெற்று வளவுகளுக்குள் கிடங்கிருந்தால் கிடங்கை மூடிவிட வேண்டும்.

4.தகரப்பேணிகள் , சாடிகள் போன்ற வற்றில் நீர்தேங்க விடக்கூடாது. நுளம்பு முட்டையிட்டு வேகமாக பெருகிடும்..

இந்த முறைகள் நுளம்புகள் தீவிரமாக பெருகாதிருக்க சில வழிமுறைகளே.

முன்பு மலத்தியோன் கலந்த கலவையை வீடு முழுதும் அடிப்பார்கள். மலத்தியோன் சுவாச பிரச்சனைகளையும் நச்சுத்தன்மை அதிகம் ஏற்படுத்துவது என்பதால் தடை செய்யப்பட்டது.



இப்போதய நவீன வசதிகளுக்கு பின் புகையடிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதில் ஒரு கவலைக்கிடம் என்னவெனில் டெங்குத்தாக்கம் எந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்டதோ அந்தக்குடும் பத்திற்குரிய வீடுக ளுக்கும் அந்த வீட்டின் சுற்றுப்புறத்துக்குமே புகையடிக்கிறார்கள். அந்த நபர் பழகிய அயலவர்கள் நடமாடிய இடங்களில் அவருக்கு கடித்த நுளம்பு பிறிதொருவருக்கு கடிக்கும் போது அதன் விளைவாகவும் டெங்கு பரவுவதால் அதன் விபரீதங்களை சிந்திக்க வேண்டும்.

முன்பு மருந்தடிகாரர்கள் வீட்டுக்குள்ளும் வளவு முழுவதும் மருந்தடிப்பர். அன்று அந்த கிராமத்து அத்தனை வீடுகளிற்கும் மருந் தடிகாரர் மருத்தடித்தே வெளியேறுவர். இப்போது அந்த நிலைமையில்லை. ஆதலால் ஒவ்வொருவரும் தம்மைப்பாதுகாத்துக் கொள்வதில் கரிசனை கொண்டவர்களாக இருப்பது அவசியமானதாகும்.

சுகாதாரப்பரிசோதகர் வெளிப்புற சுத்தத்தை பார்ப்பது போல உள்வீடுகளையும் பார்ப்பாராகில் ஒவ்வொரு வீடும் ஆயிரக்கணக்கான நுளம்புகளுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பதை அறிய முடியும்.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை சீராக நீர் வழிந்தோடக்கூடிய வடிகால்கள் இல்லை. யாழ்ப்பாண நகர்ப்புற வடிகால்கள் தொடக்கம்ஏனைய யாழ்ப்பாண வடிகால்கள் அமைக் கப்பட்டுள்ள இடங்கள் வரை புற்களும் பற்றைகளும் மண்டிப்போயுள்ளன.

வடிகால்களுக்குள் சாராயப்போத்தல்களையும் தண்ணீர்ப்போத்தல்களையும் சொப்பின் பைகளையும் போட்டு வடிகால் களை நிரவியுள்ளனர். நகர்ப்புறக்குளங்கள் தூய்மையுமில்லை. நுளம்புக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் மருந்துகள் விசிறப் படுவதுமில்லை.

நகர்ப்புறத்தில் தொகையளவில் கடைகள், பழக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் என நகர்ப்புற கடைகளும் பாதைகளும் அசுத்தத்தால் நிரம்பிக் காணப்படுகின்றன. இவற்றின் சுகாதார நிலமைகள் சுத்த நிலைமைகள் தீவிர மாக கண்காணிக்கப்படுவதுமில்லை.

இந்த நிலமையால் நுளம்புப்பெருக்கம் ஐடுத்துவரும் மழைக்குப்பின் சவால்களை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் குளிர் சாதனப்பெட்டிகள் தொடக்கம் சமையலறை வரை நுளம்பு பெருகத்தக்க வகையில் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் நுளம்புப்பெருக்கத்திற்கு இன்னுமொரு காரணியாக பராமரிப்பற்ற காணிகள் மற்றும் வெளிநாட்டவர்களால் கட்டிவிட்டு பூட்டப்பட்டுள்ள வீடுகளுமாகும். இவை மட்டுமன்றி சொகுசு விடுதிகள் விருந்தினர் விடுதிக ளென இயங்கும் பல விடுதிகள் சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறையோடு செயற்படாமையும் அதனை கண்டும் காணாதவாறு சுகாதார பரிசோதகர்கள் நடந்து கொள்வதும் ஒரு சமூக அபாயமாக மாறியுள்ளது.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை உயர்பீடத்தில் இருப்போர் டெங்குசார்ந்த விழிப்புணர்வு மற்றும் நகர்ப்புற சுகாதாரத்தில் உயரிய கவனம் எடுக்காது விட்டால் எதிர்வரும் மழைக்காலம் டெங்குத்தாக்கத்தால் சவால் மிக்கதாகவே அமையும். கிராமங்கள் எப்போதும் சுத்தம் சுகாதாரம் என அழகாகத்தான் இருக்கின்றன. நகர்ப்புற மக்களும் அரசியல் தலைவர்களும் பொறுப்பு மிக்க தலைவர்களும் அசமந் தப்போக்கோடும் சுடலைகளை அழகுபடுத்துவதிலே பெருமை கொள்கிறார்கள்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# பொருளாதாரமும் தேர்தலும்

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பரப்புரைகளும் சூடுபிடித்திருக்கின்றது. என்றும் இல்லாதளவுக்கு அதிகமானவர்கள் இந்தத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார்கள். இதில் பெரும்பாலானவர்கள் சுயேச்சை வேட்பாளர்கள். சுயேச்சைகளில் பலர் மற்றொருவருக்காக டம்மி வேட்பாளர்களாகத்தான் களமிறங்கியிருக்கின்றார்கள். அதாவது, இன்னொருவருடைய வாக்குகளைப் பிளவுபடுத்துவதற்காக பிரதான வேட்பாளர்களால் களமிறக்கப்பட்டவர்கள். தேர்தலில் வெற்றிபெறுவது அவர்களுடைய நோக்கம் அல்ல.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் முக்கியத்துவம் பெறுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிதான் பிரதான காரணம். 68 இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதாகப் பெருமை பேசிய கோட்டாபய ராஜபக்ஷ அவரது பதவிக்காலத்தில் அரைப் பகுதியைக்கூட நிறைவுசெய்ய முன்னர் தன்னைத் தெரிவு செய்த மக்களாலே விரட்டி அடிக்கப்பட்டார். ஒரு ஆசனத்தைக் கூட பொதுத் தேர்தலில் பெற்றுக்கொள்ளாத ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலிலிருந்து ஒதுங்கிவிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க இன்று இலங்கை அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகுவதற்கு இந்தப் பொருளாதார நெருக்கடியும், அதனை லாவகமாகப் பயன்படுத்திக்கொண்டமை தான் காரணம். பொருளாதார நெருக்கடியை மிகவும் நுட்பமகப் பயன்படுத்தி தன்னை அவர் உயர்த்திக்கொண்டிருக்கின்றார். ரணில் இல்லையென்றால், இந்த நெருக்கடியிலிருந்து இந்த நெருக்கடியிலிருந்து மீண்டிருக்க முடியாது என சாதாரண மக்கள் பேசும்நிலை உருவாகியிருப்பதுதும் அவருக்கான ஒரு வெற்றிதான்!

இந்த வெற்றியைத்தான் இப்போது அவர் தன்னுடைய ஜனாதிபதித் தேர்தலுக்கான வெற்றியாக முதலீடு செய்கின்றார். இலங்கையின் மிகப்பெரிய கட்சி என்று வர்ணிக்கப்பட்ட கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்துகொண்டே கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிடுவதை அவர் தவிர்த்திருந்தார். இப்போது அவரது கட்சி உடைந்துபோயுள்ள நிலையிலும், அவர் ஜனாதிபதித் தேர்தலில் துணிந்து போட்டியிடுகின்றார். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்ற சான்றிதழ் தனக்கு வெற்றியைப் பெற்றுத் தரும் என்ற அவரது நம்பிக்கைதான் அதற்குக் காரணம்.

ஆனால், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்ற பெருமை மட்டும் அவருக்குப் போதுமானதல்ல. பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையாக இருப்பதே இனநெருக்கடியும், மூன்று தசாப்த காலமாகத் தொடர்ந்த போரும்தான். இந்த நெருக்கடிக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காணமல் பொருளாதாரத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமன்றி இத்தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களும் இதற்கான தெளிவான பதிலைச் சொல்ல வேண்டிய தேவை உள்ளது. காலம் கடத்தாது தமது தீர்வுத் திட்டத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.!

# அடிமட்ட விலைக்கு கொள்வனவு செய்யப்படும் முருங்கைக்காய்

**அனைத்து உற்பத்திகளிற்கும் அரசாங்கம் நியாய விலை என கூறி வரும் நிலையில் தமது மரக்கறி உற்பத்திகளுக்கு மாத்திரம் உரிய விலை இன்றி அல்லலுறுவதாகவும் தெரிவித்துள்ளனர்**

**க.அமுதன்–கீரிமலை**

வடக்கு மாகாணத்தில் முருங்கைக்காய்க்கு உரிய விலை சந்தையில் கிடைக்காத காரணத்தினால் இந்த பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடமும் இதே போன்று தாங்கள் பெரும் பாதிப்பை எதிர்க் கொண்டதாக முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இரவு நேரங்களில் குரங்குகள் மற்றும் காட்டு யானைகளின் அட்டகாசமும் அதிகரித்துள்ளமையினால், இந்த பயிர்செய்கை ஊடாக எந்தவொரு இலாபமும் நன்மையும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அறுவடை செய்யும்போது அதற்கான கூலி பணத்தை கூட பெற முடியாத நிலையில் சந்தையில் முருங்கை யின் விலை காணப்படுவதால், அறுவடைக்கு தயாராக உள்ள முருங்கைக்காய்களைக்கூட அறுவடை செய்யாது கைவிடும் நிலைமைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

35 முதல் 40 ரூபாய்கு முருங்கைக்காய் கொள்வனவு செய்யப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு 700 ரூபாய் முதல் 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் கிலோ ஒன்றின் விலை தற்பொழுது 35 ரூபாய் தொடக்கம் 40 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படுவது மிகவும் விசனமளிக்கின்றது.

இதன் காரணமாக பல விவசாயிகள் தமது தோட்டத்தில் உள்ள முருகங்கை காயினை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும், இதன் காரணமாக இடைத்தரகர்கள் அதிக இலாபம் பெறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படும் முருங்கைக்காயானதுஒரு கிலோவின் 250 தொடக்கம் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இருப்பினும் தோட்டச் செய்கையாளர்களிடம் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்ய முற்படுவதுடன், பல மாத காலமாக வெயில் மழை பாராது அயராது உழைத்து பசளை கிருமிநாசினி என பல ஆயிரக் கணக்கான ரூபாயை செலவழித்து முருங்கை செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் தற்பொழுது அறுவடை செய்த முருங்கைக்காயை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் முருங்கை செய்கையில் இருந்து விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கவலை வெளியிடுகின்றனர்.

அனைத்து உற்பத்திகளிற்கும் அரசாங்கம் நியாய விலை என கூறி வரும் நிலையில் தமது மரக்கறி உற்பத்திகளுக்கு மாத்திரம் உரிய விலை இன்றி அல்லலுறுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மிடம் உள்ள முருங்கைக்காயை ஒரு கிலோ நூறு ரூபாய்க்கு மேல்தான் கொடுக்க முடியும் எனவும், அவ்விலைக்காவது தம்மிடம் உள்ள முருங்கைக்காயை கொள்வனவு செய்ய முன்வருமாறும் முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறுபட்டு எல்லா பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தாலும் விவசாயிகளால் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் மரக்கறிகளுக்கு எப்போதும் தீர்மானமான விலைகள் விதிக்கப்படுவது இல்லை.

அப்படி அரசாங்கம் விலைகளை நிர்ணயித்து இருந்தாலும் சந்தையில் நிர்வாகம் செலுத்துபவர்கள் அதனை கருத்தில் கொள்வதும் இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விவசாயிகள் அது இந்த கவலையை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களது உற்பத்தி பொருட்களுக்கு ஏற்ற

விலையினை அவர்களே தீர்மானிப்பதற்கு வகை செய்து கொடுக்க வேண்டும் என்றும், உழவர் சந்தைகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,90,250 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,07,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி:** பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால், வடக்கு கிழக்கில் அதற்காக போதிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா?

**சபாநாதன் ரமேஷ்குமார்**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**

**பதில்:** நல்ல கேள்விதான். பொருளாதார நெருக்கடியின் பின்னர் உல்லாசப் பயணத்துறை வளர்ந்து வருகின்றது என்பது உண்மை. ஆனால், அதனை மேலும் வளர்த்தெடுப்பதாயின் வடக்கு கிழக்கின் மீதான கவனமும் அதிகமாக இருக்க வேண்டும். காரணம், வடக்கு, கிழக்கில் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய பல பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

இவ்வருடம் நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 12,50,000ஐத் தாண்டியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கூற்றுப்படி, இந்த வருடத்தில் இதுவரை சுமார் 12,71,432 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள்வருகைதந்துள்ளனர்

வெளிநாட்டுப் பார்வையாளர்களில் 2,37,649 பேர் இந்திய சுற்றுலாப் பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர ரஷ்யா, பிரிட்டன், ஜெர்மனி, சீனா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த ஆண்டு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இம்மாதம் முதல் 11 நாட்களில் மொத்தமாக 73,373 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உல்லாசப்பயணிகள் அதிகளவுக்கு இலங்கை வருவதற்கு இரண்டு காரணங்கள் பிரதானமாக உள்ளன. ஒன்று - இந்தியா அண்டை நாடாக இருப்பதால், போக்குவரத்துச் செலவீனங்கள் குறைவாக இருக்கும். இரண்டு - இரு நாடுகளுக்கும் இடையில் இருக்கக்கூடிய கலாசார, பண்பாட்டுத் தொடர்பு.

வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடிய கோவில்கள், இயற்கை வனப்பு மிக்க, தீவுகள் போன்றன தென்னிந்திய மக்களைக் கவரக்கூடியவை. ஆனால், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது அவற்றுக்கு அவசியமான உள் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கோ அரசாங்கம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமன்றி, பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டுவிட்ட போதிலும், அதன் ஓடு பாதைய மேலும் விஸ்தரித்து பெரிய விமானங்கள் வருவதற்கும் வழி செய்யப்படவில்லை.

இந்த விடயத்தில் இப்போது கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. அதன் மூலமாக உல்லாசப் பயணிகள் அதிகளவுக்கு வந்து செல்வதற்கும், வர்த்தக செயற்பாடுகள் மேம்படுத்தப் படுவதற்கும் தேவையான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத் தால் உல்லாசப் பயணத்துறை உண்மை யாகவே மேம்பாடடையும்.

வடக்கு, கிழக்கில் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்காமல் நாட்டில் உல்லாசப் பயணத்துறையில் முழுமையான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

**உங்கள் கேள்விகளை**

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 150/= |
| உருளைக்கிழங்கு | 220/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | 200/= |
| கோவா | 320/= |
| கரட் | 380/= |
| வாழைக்காய் | 300/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டக்காய் | 100/= |
| பயற்றங்காய் | 300/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கக்காய் | 160/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 193/= |
| கனடா டொலர் - | 213/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 323/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 222/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 376/= |
| சுவிஸ் பிராங் - | 337/= |
| அமெரிக்க டொலர் - | 295/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 203/= |
| கனடா டொலர் - | 222/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 336/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 353/= |
| அமெரிக்க டொலர் - | 303/= |

**குப்பம்மா காணமல் போன நேரம் பாத்து வெளிநாட்டால வந்த எங்கட சொந்தக்காரர் ஒருத்தர் உதைக் கேள்விப்பட்டுப் போட்டு அதுகள் எங்கையும் டேற்றிங் போயிருக்கும் நீங்கள் உங்கடபாட்டிலை இருங்கோ கொஞ்ச நாளையில சலிச்சுப் போய் அதுகள் திரும்பி வந்திடும் எண்டார்.**

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

நான் முந்திச் சொன்ன மாதிரி எங்களிட்டை குப்பம்மா எண்டு ஒரு கிடாரிக் கண்டு கிண்டது .அவள் சின்னனா இருக்கேக்கை அம்போருவா குடுத்து அப்பு வாங்கியந்தவர் .

இதுக்குள்ளை எங்கட குப்பம்மா ஆச்சியிட்டை கைத்தீன் வாங்கித் திண்டு திண்டு ஊர்வழிய திரியிற நாம்பன்களுக்கு கண்ணைப்பறிக்கிற மாதிரி நல்ல வடிவா லட்சணமா வளந்து வந்திட்டாள்.

உப்பிடி வளந்தவள் மற்றப்பசுக்கள் மாதிரியே சாமத்தியப்பட்டுட்டாள் எண்டது ஒரு நாள் பறுவம் அண்டைக்கு அவள் குமுறிக் குமுறி அழத்தான் எங்களுக்கு விளங்கினது. ஆச்சி அப்புவிட்டை உவள் மாட்டைத்தேடி அழுகிறாள் கொண்டே வேலனிட்டை மாட்டுக்கு விட்டுக்கொண்டு வாங்கோ இல்லாட்டில் கட்ட றுத்து கந்தறுந்து போடுவாள் எண்டு எச்சரிக்கை விட்டா.

முந்தி நான் சொன்ன மாதிரி எங்கட ஊரில உந்த மாட்டுக்கு விடுகிற, ஆட்டுக்கு விடுகிற, ஆக்கள் இருந்தவை. அவையிட்ட நல்ல வாட்ட சாட்டமான நாம்பன்களும் கிடாயளும் டபிள்யூ டபிள்யூ எவ்வில மல்யுத்தம் செய்யிறவங்கள் மாதிரி நிப்பினம். குப்பம்மா மாதிரி கத்திக் குழறுகிற பசுக்களை, மறியளைக்கொண்டு போனா அங்கை நிக்கிற நாம்பன்கள், கிடாயள் ஒருமாதிரி அவையைச் சாந்தப்படுத்தி அனுப்பிவிடுவினம். குப்பம்மா மாதிரி முதன் முதலா உப்பிடிச்சாந்தம் அடையிற மனிசருக்கெண்டு சாந்தி முகூர்த்தம் வைப்பினம் அது இரகசியமா நடக்கும்.

ஆனா குப்பம்மா மாதிரி ஆக்களுக்கு உது பரகசியமா பட்டப்பகலில் ஆக்கள் பாத்துக் கொண்டு நிக்க வெட்ட வெளியில நடக்கும். ஆனா குப்பம்மா மாதிரியானவை கோல்பேசில இல்லாட்டில் பண்ணைப் பாலத்தில மினக்கெடுகிற ஆக்கள் மாதிரி உதுகளுக்கெல்லாம் வெக்கப்படாயினம். அப்பு சுருட்டுக்கொட்டில் வேலைப் பிராக்கில குப்பம்மான்ரை கத்தலைக் கவனிக்கேல்லை. அவளும் ஆத்திரம் தீருமட்டும் வைக்கல், தவிடு, புண்ணாக்கு, ஒண்டையும் தின்னாம கத்திக்குழறிப் பேந்து ஒருமாதிரி அடங்கிப்போனாள். ஆனாலும் கட்டாயம் அவளுக்கு அப்புவிலையும் ஆச்சியிலையும் கடும் கோவம் இருந்திருக்கும். இரு இரு உந்தச் சீலம்பாயளுக்குச் செய்யிறன் வேலை எண்டு மனசுக்கை கறுவியிருப்பாள்.

ஒரு நாள் நிண்டாப்போல விடியக் காலத்தாலை இருந்து குப்பம்மாவைக் காணேல்லை. ஆச்சியும் அப்புவும் வயல்சாடுவாய், வளவுகள் எல்லாந்தேடிக் களைச்சுப் போச்சினம். பக்கத்தில எங்கட கதிரவேலு மாமாவின்ரை செங்காரி நாம்பனையும் காணேல்லை எண்டு பேந்துதான் அறிஞ்சம். எனக்கு உவை ரெண்டு பேரும் ஒண்டா வளவுவழியை நக்கிக்கொண்டும் தடவிக்கொண்டும் மேஞ்சு கொண்டு திரியேக்கையே ஒரு சமுசியம் இருந்தது. ஆனால் நான் பறுவாய் பண்ணாமல் விட்டுப்போட்டன் .குப்பம்மா காணமல்போன நேரம்பாத்து வெளிநாட்டால வந்த எங்கட சொந்தக்காரர் ஒருத்தர் உதைக் கேள்விப்பட்டுப் போட்டு அதுகள் எங்கையும் டேற்றிங் போயிருக்கும் நீங்கள் உங்கடபாட்டிலை இருங்கோ கொஞ்ச நாளையில சலிச்சுப் போய் அதுகள் திரும்பி வந்திடும் எண்டார்.

அவர் சொன்ன மாதிரியே ஒருநாள் செங்காரியும் குப்பம்மாவும் தனித்தனிய ஆளொரு பக்கத்தால வந்து சேந்திச்சினம். அவை ரெண்டு பேருக்கையும் ஏதோ மிஸ் அண்டஸ்ராண்டிங் வந்திருக்க வேணும்



எண்டு நெச்சன் எண்டாலும் ஒருத்தரிட்டையும் சொல்லேல்லை. ரெண்டும் முந்தின மாதிரி சேர்ந்து மேயப்போற வாறதை நிப்பாட்டிப்போட்டினம். கொஞ்ச நாளைக்குப் பிறகு நிண்டாப்போல குப்பம்மா பேந்தும் காணாமல் போனாள். பேந்து பழையபடி அப்புவும் ஆச்சியும் தேடித் தேடிக் களைச்சுப்போய் இருக்க வந்த ஒருத்தர் சொன்னார் உங்கட குப்பம்மாவை புன்னாலை வெளியில நல்ல நீக்ரோ மாதிரி வாட்டசாட்டமான நாம்பன் ஒண்டோட திரியக்கண்டன். அவை ஒண்டாச் சீவிக்கினம்போல அதாவது லிவிங் ருகெதர் மாதிரி இருக்கு எண்டார்.

ஆச்சி உதென்ன இழவாக்கிடக்கு காலாகாலத்தில நான் சொன்ன மாதிரி வேலனிட்டைக்கொண்டே மாட்டுக்கு விட்டிருந்தால் உவள் உப்பிடி ஓடுகாலியா வந்திருப்பாளே எண்டு அப்புவைப் பேச அப்பு வழக்கம்போல திருதிருவெண்டு முழிச்சார் .கொஞ்ச நாளைக்குப் பிறகு பாத்தா குப்பம்பா வயித்தைத் தள்ளிக் கொண்டு வந்தாள். உடனை ஆச்சி அடி குப்பைச்சி எங்கையிடி திரிஞ்சு போட்டு வாயும் வயிறுமா வந்து நிக்கிறாய் எண்டு பரியரிக்கத் துடங்கினா.

பின்னேரம் சுருட்டுக்கொட்டிலால வந்த அப்பு உதைப்பாத்துப்போட்டு குப்பம்மா வலு கெட்டிக்காரி எனக்கு செலவு ஒண்டும் வைக்கேல்லை . இல்லாட்டில் வேலனுக்கு அம்போருபா அழுதிருக்க வேணும் எண்டு ஆனந்தப்பட்டார். ஆனா அப்பு பாவம் அவருக்கு உந்த அம்பது ரூபாவை லாபமாக்கினது கதிரவேலற்றை செங்கா ரியோ இல்லாட்டில் கடைசியில புன்னாலையிலை கொண்டு திரிஞ்ச கறுவலோ எண்டு கடைசிவரையும் தெரியாது...

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும் போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடிதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும்,அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழ் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுபனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினலால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**குளங்களின் பராமரிப்பு மிக முக்கியமான ஒன்று. அது சரிவரப் பேணாது போனால் அந்த ஊரையே வறுமை சூழும். 1880பதுகளில் முதல்முதலாக குளங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விவசாய முயற்சிகளில் அரசாங்கம் கவனத்தை திருப்பியது. குறிப்பாக வன்னியில் குளங்கள் பற்றிய ஒரு ஆய்வு செய்யப்பட்டது.**

# நீரின்றி அமையாது இவ்வுலகு

## பார்வை 2



தமிழ்க்கவி



கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். வயல்கள் நீர்நிலைகளை அண்டியதாக இருக்கவேண்டும். அல்லது மழைநீரினால் பயன் பெற வேண்டும்.

நீரை நாம் மழைக்காலங்களில் அதிகமாக பெற்றாலும் அவற்றை காப்பாற்ற குளங்கள் இருந்தன. காலம் முழுதும் மழை பெய்வதில்லை. பெய்தாலும் நீர் பள்ளங்களை நோக்கி ஓடி ஈற்றில் அதுவே ஆறாகி கடலில் கலந்து விடுகிறது. பண்டைக்கால மக்கள் இப்படி பாயும் ஆறுகளிலிருந்து நீரைப் பெற்று விவசாயம் செய்தார்கள். அது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நிகழ்ந்தது.

மன்னாராட்சிக் காலங்களில் இப்படி வடிந்தோடும் நீரை பக்குவமாக அடக்கி அணைகளைப்போட்டுதடுத்து வைத்தார்கள். பின்னர் அந்த நீரை முறைப்படி பகிர்ந்து நிலத்தில் பாய்ச்சி வேளாண்மை செய்தார்கள். முதலாக குழுக்களாக இருந்தவர்கள் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்தனர். அது அவர்களது தொழில் முறைகளால் ஏற்பட்டது. பாரம்பரிய குடிகளின் இடையே அங்குள்ள நிலங்களின் உடமையும் இருந்தது. எனவே நிலமற்றோரும் இருந்தனர். அவர்கள் அங்குள்ள தொழில்களை அண்டிப் பிழைப்போராக இருந்தனர்.

காலப்போக்கில் வரி வசூலிக்கும் மன்னர்கள் தமது வருவாயை திட்டமிட விவசாயிகளுக்கான அடிப்படை வசதிகளை பொது உடமையாக்கினார்கள். அப்போதுதான் கண்மாய்கள் குளங்களாக உருப்பெற்றன.

குளங்களின் பராமரிப்பு மிக முக்கியமான ஒன்று. அது சரிவரப் பேணாது போனால் அந்த ஊரையே வறுமை சூழும். 1880களில் முதல்முதலாக குளங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விவசாய முயற்சிகளில் அரசாங்கம் கவனத்தை திருப்பியது. குறிப்பாக வன்னியில் குளங்கள் பற்றிய ஒரு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த வகையில் சிறுசிறு முக்கியமில்லாத குன்றுகளிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் சிறு சிறு ஆறுகள் நிரப்பி வழியும் போது ஒரு ஏரியாக குளமாக நின்றன. அவை களே நீர்த்தேக்கங்களாக மாற்றப் பட்டன. ஒவ்வொரு குளத்துக்கும் மேலே உள்ள குளங்களிலிருந்து நீர் தொடர்பு இருந்தது. கீழே உள்ள குளங்கள் மேலே உள்ள குளங்களிலிருந்து நீரைப் பெறுகின்றன.

குளங்களின் தொடர்பு இவ்வாறு இருந்தாலும் கீழே உள்ள குளங்களின் நீர்மட்டம் மேலே உள்ள வயல்களின் நில மட்டத்திற்கு உயருகின்றன. மேலே குறித்த காலப்பகுதியில் சிறுசிறு குளங்கள் உடைந்து போன நிலையில் கைவிடப்பட்டுள்ளமையும் அவற்றை மூழ்கடித்து காடுகள் வளர்ந்து விட்டமையும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

காடுகளை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்து குளங்களையும் திருத்தி அவற்றை பயிர் செய்கைக்கு கொண்டுவர வேண்டும் என்பதை அறிக்கையில் சுட்டிக்காட்டிய அதிகாரி பார்க்கர் ஆகும். அவரால் குறிக்கப்பட்டுள்ள ஆற்றுவழிகளும் குளங்களின் தொகுப்பையும் ஜே.பீ லூயிஸ் அவர்களால் எழுதப்பட்ட வன்னி மாவட்டங்கள் என்ற புத்தகத்தில் காணலாம். அங்கு சுட்டப்பட்ட பெயர்களும் மாவட்டங்களும் அக்கால சிற்றரசுகளின் படிமுறையிலேயே அமைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாக பாவற்குளமும், முல்லைத்தீவில் தண்ணிமுறிப்புக்குளமும் அமைந்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளமும், உள்ளது. அட்டா இரணைமடுவைக் காணவில்லையா? அப்போது அது கட்டப்பட வில்லை.

சின்னச் சின்னக் குளங்களின் கூட்டமைப்பாக பெரிய குளங்கள் இருந்தன. வவுனியா முல்லைத்தீவு மன்னார் போன்ற எல்லைக் கிராமங்களில் இத்தகைய



ஏராளமான குளங்களின் கீழ் குடியேற்றங்கள் உருவாகின. நாடு சுதந்திரம் அடைவதன் முன்னரே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சிறு வயல்களுக்கு நீர் பாச்சும் குளங்களின் உரிமை அதன்கீழ் விவசாய நிலங்களைக் கொண்டுள்ள மக்களிடமே இருந்தது. எனினும், அந்த விவசாயிகளிடையே ஒரு கமவிதானை தெரிவு செய்யப்பட்டு அவர் மூலமாக விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்கப் பட்டது. குளங்களை புனரமைத்தல், அணைக் கட்டுகளைப் பராமரித்தல் போன்ற வேலைகளை மக்களே முன்வந்து செய்தனர்.

குளங்களின் கட்டுகளை துப்பரவாக வைத்திருக்க வேண்டும். அதன்மீது மரங்களோ சிறு பற்றைகளோ வளர விடுதல் ஆகாது. ஆனால் எமது குளங்களில் மரங்கள் வளர விடப்படுகின்றன. மரங்களின் வேர்கள் கட்டில் ஊடுருவி விடுவதால் குளக்கட்டு உடைப்பெடுக்கிறது. மரங்கள் அடைந்து கிளைபரவி வளர்வதால் மழைக் காலங்களில் பெரும் காற்று வீசும் போது, மரங்கள் அசைந்து வேர்கள் ஆடி கட்டின் உறுதியை சிதைக்கிறது. இந்த அசைவினால் வரும் வெடிப்புகளூடாக நீர்கசிந்து கட்டின் உறுதியை சிதைத்து கட்டு உடைந்து போகும். இப்போது எமது பாரம்பரியமான நாட்டார் பாடல்களைப்பாருங்கள்.

"கூழாவடியாம் குளிர்ந்த நிழலாம்"
குளக்கட்டு நீளம் புளியமிணலாம்"

மரங்களையிட்டே ஒவ்வொரு மரத்தின் கீழும் ஒன்றில் வைரவர், ஒன்றில் பிள்ளையார், ஒன்றில் காளி ஒன்றில் குருசு, என ஒவ்வொரு மதத்தினரும் வேளாண்மை அறுவடை முடித்து வந்து பொங்கலிட்டு போற்றுகிற குளக்கட்டுகளை பார்த்தால் கட்டின் உச்சியில் மரங்கள் இல்லை. குளக்கட்டின் அடியில்தான் மரங்கள் நின்றன.

தெய்வங்களை வைத்தால் அந்த குளத்தின் அருகில்கூட அசுத்தம் செய்ய மக்கள் அஞ்சுவர். காரணம் மலசலகூடங்களற்ற அந்தக்காலத்தில் குளக்கரைகளை அண்டியே கழிப்பில் ஈடுபடுவது வழக்கம். மலசலங்கழித்தபின் குளத்தில் கழுவுவார்கள். அதிலிருந்து வந்த பழமொழிதான். **"குளம் எத்தின கு...யக்கண்டது கு...டி எத்தினை குளத்தைக்கண்டது"**

குளங்களின் பயன்பாடு தனியே வயலுக்கு நீர்பாய்வதில்லை. அந்த ஊர்



மக்களின் உணவுத் தேவை மீன் கீரைவகை, கிணற்று ஊற்று, கைத்தொழில் முயற்களுக்கான உதவி என பல பயன்பாடுகளுடன் ஊர்மக்களின் குளிப்பு, ஊறவைக்கும் துறை, (கிடுகு கயற்று நார் தென்னம்மட்டை) குளம் வற்றும் காலத்தில் பெறப்படும் மண்ணில் அடிக்களியில் செய்யப்படும் சட்டிபானை, வண்டல் பொருக்கு அள்ளி விவசாய நிலத்தில் கொட்டுவது, என ஏராளமான பயன்பாடுகள் குளத்தின் பயன்பாடுகளில் முக்கிமானதாகும்.

குளங்களைப் பற்றி நாம் விரிவாகப் பார்க்கப்பார்க்க அதிசயமாக தெரியும். ஆனால் மக்களிடமிருந்து குளங்களின் பயன்பாடுகள் இன்று பறிக்கப்பட்டு அது அநியாயமாக விற்பனை செய்யப்படுகிறது.

குளங்களுக்கு சேதம் விளைவிக்கும் இன்னுமொரு விடயம் மாடுகள். அநேகமான கிராமிய குளக்கட்டுகளில் மாடுகள் குளக்கட்டில் ஏறிச்செல்லவும் இறங்கவும் பயன் படுத்தும் பாதைகளைக் காணலாம். சிறு குளக்கட்டுகளில் இவை தொடர்ந்து ஒரேபாதையை பயன்படுத்தி அவை நடந்த பாதைகள் காய்ந்து வரைவடைந்து தேய்ந்திருப்பதை காணலாம். வரட்சிக் காலத்தில் மாடுகள் தண்ணீர் குடிக்க சென்றுவர பாதை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

பண்டைய குளங்களின் அமைப்பை கவனமாக பார்த்தால் அன்றைய மக்களின் அறிவும், அதற்குத் தோதாக அமைந்துள்ள நமது பூமியின் அமைப்பும், பெரு வியப்பைக் கொண்டுவரும். குளங்கள் என்பது ஏதோ நீர் தேங்கி நிற்கும் இடமல்ல. அது வளம். திட்டமிட்ட அறிவுடன் அதை செய்வதில் கிராமப்புற புற மக்களே முன் நின்றுமுள்ளனர்.

இயந்திரங்கள் இல்லாத ஒரு காலத்தில் மனித முயற்சினால் உருவான குளங்களே இவை. தற்காலத்தில் இவை மீளுருவாக்கம் செய்யப்பட்ட போதே யந்திரங்கள் பயன்பட்டுள்ளன.

குளங்களின் அமைப்புகளை நேரில் காண வன்னிக்கு வாருங்கள். என்னால் முடிந்தளவுக்கு தகவல்களை தருகிறேன். அந்த வகையில் ஈரற் பெரிய குளத்தை அடுத்த வாரம் பார்ப்போமா?

# வரிக் கொள்கைகளும் பொருளாதார வளர்ச்சியும்

## சிக்கலான உறவு




வரிக் கொள்கைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான உறவு ஒரு சிக்கலான மற்றும் பெரும்பாலும் சர்ச்சைக்குரிய தலைப்பு. ஒருபுறம், அத்தியாவசிய பொது சேவைகள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக திட்டங்களுக்கு நிதியளிக்க அரசாங்கங்களுக்கு வரி வருவாய் தேவைப்படுகின்றது. மறுபுறம், அதிக வரிகள் வேலை வாய்ப்பு, முதலீடு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றைத் கட்டுப்படுத்துவதுடன் பொருளாதார விரிவாக்கத்தைத் தடுக்கலாம். இந்தக் கட்டுரை வரிக் கொள்கைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள சிக்கலான தன்மை, பல்வேறு வரி கட்டமைப்புகள், அவற்றின் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள விவாதங்கள் ஆகியவற்றை ஆராய்கின்றது.

வரி அமைப்புகள் மற்றும் அவற்றின் கட்டமைப்பு உலகெங்கிலும் உள்ள வரி அமைப்புகள் வருவாயை உயர்த்த பல்வேறு கருவிகளைப் பயன்படுத்துகின்றன. சில முக்கிய வரி கட்டமைப்புகளின் அமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான அவற்றின் இணைப்பு பின்வருமாறு:

» தனிநபர் வருமான வரி: இந்த வரி தனிநபர் மற்றும் நிறுவன வருவாயின் ஒரு பகுதியை விதிக்கின்றது. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் விகிதாச்சாரத்தில் பங்களிப்பதை உறுதி செய்வதன் மூலம் இது நியாயத்தை ஊக்குவிக்கின்றது என்று ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். இருப்பினும், உயர் விளிம்பு வரி விகிதங்கள் (குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் உள்ள வருமானத்திற்குப் பயன்படுத்தப்படும் விகிதம்) தனிநபர்கள் அதிகமாக வேலை செய்வதிலிருந்து அல்லது அதிக ஊதியம் பெறும் வேலைகளில் ஈடுபடுவதைத் தடுக்கலாம்.

» நிறுவன (கார்ப்பரேட்) வருமான வரி: இந்த வரி ஒரு நிறுவனத்தின் இலாபத்தில் விதிக்கப்படுகின்றது. வருமான வரியைப் போலவே, அதிக கார்ப்பரேட் வரி விகிதங்களும் வணிகங்களை முதலீடு செய்வதிலிருந்து தடுக்கலாம் மற்றும் மறு முதலீட்டுக்கான இலாபத்தைத் தக்கவைத்துக்கொள்ளலாம், வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கலாம். இருப்பினும், நிறுவன வரி என்பது ஒரு பொருளாதாரத்திற்குள் உருவாக்கப்படும் இலாபத்தின் ஒரு பங்கைக் கைப்பற்றுவதற்கான ஒரு வழியாகும் என்று சிலர் வாதிடுகின்றனர்.

» நுகர்வு வரி (Consumption Tax): இந்த வரி, பெரும்பாலும் விற்பனை வரியாக அல்லது மதிப்பு கூட்டப்பட்ட வரியாக (VAT) செயல்படுத்தப்படும், பொருட்கள் மற்றும் சேவைகளின் இறுதி நுகர்வுக்கு வரி விதிக்கப்படுகின்றது. உற்பத்தி முடிவுகளை நேரடியாகப் பாதிக்காததால், நுகர்வு வரிகள் பொதுவாக பொருளாதார நடவடிக்கைகளில் குறைவான சிதைவுகளாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், நுகர்வு வரிகள் தங்கள் வருமானத்தில் பெரும் பகுதியைச் செலவழிக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு விகிதாச்சாரத்தில் சுமையை ஏற்படுத்துகின்றன என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

» சொத்து வரி: இந்த வரி ரியல் எஸ்டேட் அல்லது பிற சொத்துக்களின் உரிமையின் மீது விதிக்கப்படுகின்றது. சொத்து வரிகள் நிலையான வருமான ஆதாரமாக இருக்கலாம், ஆனால் சொத்தில் முதலீடு செய்வதை தடுக்கலாம் அல்லது குறைந்த சொத்து வரி சுமைகளைத் தேடும் வணிக இடமாற்றங்க



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

» ஊதிய வரி (Payroll Tax): இந்த வரி ஊதியங்கள் மற்றும் சம்பளத்தில் விதிக்கப்படுகின்றது, இது பெரும்பாலும் சமூக பாதுகாப்பு அல்லது வேலையின்மை காப்பீட்டு திட்டங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுகின்றது. ஊதிய வரிகள் வணிகங்கள் (ஒரு பகுதியை செலுத்துபவர்கள்) மற்றும் பணியாளர்கள் (வரி மூலம் ஊதியம் குறைக்கப்படும்) ஆகிய இரண்டையும் பாதிக்கலாம். உயர் ஊதிய வரிகள் வணிகங்களுக்கான தொழிலாளர் செலவினங்களை அதிகரிக்கலாம் மற்றும் தொழிலாளர்களுக்கு செலவழிப்பு வருமானத்தை குறைக்கலாம், இது பொருளாதார நடவடிக்கைகளை குறைக்கும்.

இவை உலகளவில் பயன்படுத்தப்படும் சில முக்கிய வரி கட்டமைப்புகள். வருவாய்

உருவாக்கம், நேர்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொன்றிலும் அதன் சொந்த நன்மைகள் மற்றும் தீமைகள் உள்ளன.

### வளர்ச்சி மீதான வரிக் கொள்கையின் தாக்கம்: சமநிலைப்படுத்தும் சட்டம்

### The Impact of Tax Policy on Growth: A Balancing Act

பொருளாதார வளர்ச்சியில் வரிக் கொள்கையின் தாக்கம் ஒரு நுட்பமான சமநிலையைச் சார்ந்துள்ளது. இங்கே சில முக்கிய பரிசீலனைகள் உள்ளன:

» செயல்திறன் (Efficiency): நன்கு வடிவமைக்கப்பட்ட வரி அமைப்பு பொருளாதார முடிவுகளில் ஏற்படும் சிதைவுகளைக் குறைக்கின்றது. வெறுமனே, வரிகள் வேலை வாய்ப்பு, முதலீடு அல்லது புதுமைகளை ஊக்கப்படுத்தக் கூடாது. அதிக விகிதங்களைக் கொண்ட குறுகிய வரிகளை விட குறைந்த விகிதங்களைக் கொண்ட பரந்த வரி அடிப்படைகள் மிகவும் திறமையானதாக இருக்கும்.

» ஊக்கத்தொகை: விரும்பிய பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்க வரிக் கொள்கைகள் பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வரிச் சலுகைகள் (R&D) புதுமைகளை ஊக்குவிக்கலாம், அதே சமயம் புதிய பணியாளர்களை பணியமர்த்துவதற்கான வரிச்சலுகைகள் வேலை உருவாக்கத்தை அதிகரிக்கும்.

» முதலீடு: மூலதன ஆதாயங்கள் மீதான அதிக வரி விகிதங்கள் (சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபம்) முதலீட்டை தடுக்கலாம். மாறாக, குறைந்த மூலதன ஆதாய வரிகள், தேய்மானத்திற்கான வரிச் சலுகைகளுடன் (காலப்போக்கில் சொத்துக்களின் மதிப்பில் சரிவு), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முதலீட்டை ஊக்குவிக்கலாம், இது உற்பத்தித்திறனை அதிகரிக்க வழிவகுக்கும்.

» நேர்மை: ஒரு முற்போக்கான வரி முறை, அதிக வருமானம் உள்ளவர்கள் அதிக வரிகளை செலுத்துவது, பெரும்பாலும் நியாயமானதாகக் கருதப்படுகின்றது. இருப்பினும், அதிகப்படியான முற்போக்கான அமைப்புகள் அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு தடையாக அமைந்துவிடும்.

» அரசாங்கச் செலவு: உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகத் திட்டங்களுக்கான அரசாங்க செலவினங்களுக்கு வரி வருவாய் நிதியளிக்கின்றது. திறமையான பணியாளர்களை ஊக்குவிப்பதன் மூலமும், வணிக நடவடிக்கைகளை எளிதாக்குவதன் மூலமும், சமூக பாதுகாப்பு வலையை வழங்குவதன் மூலமும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இந்த முதலீடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கான உகந்த வரிக் கொள்கை அதன் தனித்துவமான பொருளாதார சூழ்நிலைகள், வளர்ச்சி நிலை மற்றும் சமூக முன்னுரிமைகள் ஆகியவற்றைப் பொறுத்தது. வருவாய் உருவாக்கம், பொருளாதார செயல்திறன் மற்றும் நேர்மை ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது முக்கியமானது.

### முக்கிய வரி விவாதம்: வெவ்வேறு கண்ணோட்டங்கள்

வரிக் கொள்கையைச் சுற்றியுள்ள விவாதம் அடிக்கடி காரசாரமானதும் மாறுபட்ட கண்ணோட்டம் கொண்டதாக காணப்படுகின்றது:

» வழங்கல்சார்பு பொருளாதாரம் (Supply-Side Economics): வரிக் குறைப்புக்கள், குறிப்பாக வணிகங்கள் மற்றும் அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு, செலவழிப்பு வருமானத்தை அதிகரிப்பதன் மூலம், முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகின்றது என்று இந்த கோட்பாடு வாதிடுகின்றது. குறைந்த விகிதங்கள் இருந்தபோதிலும், ஒரு பெரிய பொருளாதார வளர்ச்சி இறுதியில் அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை உருவாக்குகின்றது என்று ஆதரவாளர்கள் நம்புகின்றனர்.

» கேள்வி/தேவை சார்பு பொருளாதாரம் (Demand-Side Economics: குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வரிக் குறைப்பு, நுகர்வோர் செலவினங்களை அதிகரிப்பதன் மூலமும், மொத்தத் தேவையைத் தூண்டுவதன் மூலமும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என்று இந்தக் கோட்பாடு கூறுகின்றது. அதிகரித்த பொருளாதார நடவடிக்கை, குறைந்த தனிநபர் வரி சுமைகளுடன் கூட அதிக வரி வருவாய்க்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

» நிதிப்பொறுப்பு (Fiscal Responsibility): இந்த முன்னோக்கு நல்ல அரசாங்க பட்ஜெட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது மற்றும் அதிகப்படியான பற்றாக்குறையைத் தவிர்க்கின்றது. அத்தியாவசிய அரசு சேவைகள் மற்றும் சமூகத் திட்டங்களுக்கு நிதியளிக்க சில நேரங்களில் அதிக வரி விகிதங்கள் அவசியம் என்று ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். அதிகப்படியான அரசாங்கக் கடன்கள் அதிக வட்டி விகிதங்களுக்கு வழிவகுக்கும், தனியார் முதலீட்டை வெளியேற்றும் மற்றும் இறுதியில் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். கூடுதலாக, பெரிய தேசிய கடன்கள் எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை திருப்பிச் செலுத்துவதற்கு பொறுப்பாகும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எவ்வாறாயினும், மந்தநிலையின் போது பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கு அல்லது நீண்டகால நன்மைகளுடன் முக்கியமான உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்வதற்கு அரசாங்கங்கள் பற்றாக்குறை செலவினங்களின் கட்டுப்படுத்தப்பட்ட அளவைப் பயன்படுத்தலாம் என்று இந்தக் கண்ணோட்டத்தின் விமர்சகர்கள் வாதிடுகின்றனர். வரலாற்று ரீதியாக, பொருளாதார வளர்ச்சியின் காலங்கள் சில சமயங்களில் மிதமான அரசாங்கக் கடன் வாங்கும் காலங்களுடன் ஒத்துப்போகின்றன என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும், வரிவிதிப்பு மற்றும் அரசாங்க செலவினங்களின் உகந்த நிலை என்பது எளிதான பதில்கள் இல்லாத ஒரு சிக்கலான பிரச்சினையாகும். நீண்ட கால பொருளாதார ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு நிதிப் பொறுப்பு மற்றும் பொருளாதார தூண்டுதலுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானது.

### உலகளாவிய வரிக்கொள்கை: பல்வேறு அணுகுமுறைகள்

உலகெங்கிலும் உள்ள நாடுகள் அவற்றின் குறிப்பிட்ட சூழல்களுக்கு ஏற்ப வரிக் கொள்கைகளை செயல்படுத்துகின்றன. சில மாறுபாடுகள் பற்றிய ஒரு பார்வை பின்வருமாறு:

» வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரங்கள் (Developed vs. Developing Economies): வளரும் பொருளாதாரங்களுடன் ஒப்பிடும்போது வளர்ந்த பொருளாதாரங்கள் பொதுவாக அதிக வரிச்சுமைகளைக் கொண்டுள்ளன. சமூகத் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு நிதியளிப்பதற்கான வருவாயின் தேவையை இது பிரதிபலிக்கின்றது. இருப்பினும், வளரும் பொருளாதாரங்கள் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கவும் உள்நாட்டு தொழில்களை ஊக்குவிக்கவும் வரிச் சலுகைகளை வழங்கலாம்.

» வரிப் போட்டித்தன்மை (Tax Competition): சில நாடுகள் வரிப் போட்டியில் ஈடுபடுகின்றன, வணிகங்கள் மற்றும் அதிக நிகர மதிப்புள்ள நபர்களை ஈர்க்க வரி விகிதங்களைக் குறைக்கின்றன. இது குறுகிய காலத்தில் பொருளாதாரச் செயல்பாடுகளை அதிகரிக்கச் செய்யும் அதே வேளையில், இது "அடிமட்டத்திற்கான போட்டிக்கு" வழிவகுக்கும், அங்கு நாடுகள் தொடர்ந்து வரிகளைக் குறைத்து, அரசாங்க வருவாய் சேகரிப்பைத் தடுக்கலாம்.

» நுகர்வு வரிகளின் உயர்வு (The Rise of Consumption Taxes): VAT (GST) மற்றும் SSCL போன்ற நுகர்வு வரிகள் பெருகிய முறையில் பிரபலமாகி வருகின்றன. அவை நம்பகமான வருவாயாகக் காணப்படுகின்றன மற்றும் வருமான வரிகளுடன் ஒப்பிடும்போது குறைவான சிதைவுகள் உள்ளன. இருப்பினும், நுகர்வு வரிகளின் பின்னடைவு (குறைந்த வருமானம் பெறுபவர்களை அதிகம் பாதிக்கும்) கவலை அளிக்கின்றது.

### சர்வதேச வரி ஒத்துழைப்பின் பங்கு

பொருளாதாரங்களின் பூகோளமயமாக்கல் வரி விவகாரங்களில் சர்வதேச ஒத்துழைப்பு

# அழுகுக்கலை என்பது ஆத்மாவின் பூரணமான வெளிப்பாடு

நேர்கண்டவர் - ஞானம் கவினி

**வளர்ச்சி அடைந்த நாடுகளில் எல்லாம் சிறுவர்கள் தொழில் கல்வியை கற்று அதன் மூலம் கல்வி கற்கும் காலங்களிலேயே தமக்கான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவாறு வளர்கின்றனர், நிச்சயமாக நாங்களும் அவ்வாறு வளர வேண்டும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.**

அழகு கலை என்பது ஆத்மாவின் பூரணமான வெளிப்பாடு. பணம் பொருள் ஈட்டுவதற்காக மாத்திரம் அன்றி உள்ளார்ந்த ஆத்மார்த்தமான ஒரு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் இந்த கலை நமக்கு அளிக்கின்றது. வாழ்க்கையின் பசுமையான காலத்தில் மாத்திரமன்றி கட்டாந்தையான வெறுமையான காலங்களிலும் கூட இந்த அழகு கலை நம்மை கைபிடித்து அழைத்துச் செல்கிறது என்று அலாதியாக பேசுகிறார் சுரேக்கா சிவகாந்தன்

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கல்வி கலாச்சாரம் என்று யாவற்றிற்கும் பெயர் போன யாழ் மண்ணிலிருந்து,

இன்று தனது விடாமுயற்சியின் மூலம் தனக்கென தனி இடங்களை தக்க வைத்திருக்கும் அழகு கலை நிபுணர் திருமதி சுரேக்கா.

கல்வி விளையாட்டு சுய பொழுது போக்குகள்என்று சுற்றி திரிந்து கொண்டிருந்த சுரேகாவை காலம் கவனித்து ஓர் அழகியல் கலையின் பால் ஈர்த்துக் கொண்டு இருக்கிறது.

எல்லா குழந்தைகளையும் போலவே தனது பாடசாலை காலங்களில் பல கனவை தன்னிடம் சுமந்து திரிந்த இவரது கரங்களில் காலம் வலிந்து திணித்திருக்கிறது ஓர் அழகியலை.

ஆம் உண்மையில் சுரேகா மிகப்பெரும் அழகியல் தான். எத்தகைய சாமானியர்களையும் அழகாக மாற்றும் மந்திர கோல் ஒன்றை இவள் தன் கைகளில் பிடித்திருக்கிறார்.

தனக்கான வழி இதுதான் என்பதை திடமாக நம்பிய சுரேக்கா ,அழுகுக்கலை தொடர்பாகசுயமாக தேடுவதற்கும் சமூக வலைத்தளங்களில், கற்பதற்கும் ஆரம்பித்திருக்கிறார். இவரது தீராத தேடலின் பயனாக, அருமையான வாய்ப்பு கள் இவரை தேடி வந்து இருக்கிறது.

**இந்தத் துறையில் உங்களுக்கு இருக்கும் ஆர்வம் பற்றி கூறுங்கள்?** என்று கேட்ட போது,

இந்த தொழில் எனது உயிர் மூச்சு, இந்த பயணத்தில் நான் இன்னும் உயரங்களை எட்ட வேண்டும் என்று எண்ணுகிறேன்.

இதன் பலாபலன்கள் எனக்கு மாத்திரம் அன்றி என்னை சுற்றியுள்ள பலருக்கும் சரியாக கிடைக்க வேண்டும் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன் என்று மிக உறுதியாக பதிலளிக்கிறார்.

**உங்களுடைய அழகு கலை பயணத்தில் நீங்கள் சந்தித்த சவால்களை பற்றி கூறுங்கள்என்று வினாவினோம்?**

உண்மையில் இந்த பணியினை பலர் அவ்வளவு சரியாக புரிந்து கொள்வது இல்லை என்று அங்கலாய்க்கும் இவர், இந்த அழகு கலை பணியானது பலருக்கு தன்னம்பிக்கையையும் அவர்களுடைய வாழ்வில் மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது .

நான் இந்தப் பணிக்காக வெளியே செல்கின்றபோது

பல சவால்களை எதிர்நோக்கி இருக்கறேன்.

நான் சந்தித்த சவால்கள் ஒவ்வொன்றும் எனக்கு மிகப்பெரும் பாடங்களை கற்றுத் தந்திருக்கிறது.

நான் இப்போது ஒரு சமூகத்தை அல்லது பல மனிதர்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்று நன்றாக கற்றுக் கொண்டிருக்கிறேன் என்று எண்ணுகிறேன்.என்கிறார்.

உண்மையில் நூற்றுக்கு எண்பது வீதமானவர்கள் தற்போது அழகு கலை தொடர்பான புரிதலை கொண்டிருக்கின்றனர். அலுவலகங்களுக்கு செல்லும் பெண்கள் தொடக்கம் குடும்பத்தில் எல்லாமாக இருக்கும் அம்மா வரை தற்போது எமது நிலையங்களை தேடி வர தொடங்குகின் றனர்.

உண்மையில் பெண்கள் தங்களை கவனித்துக் கொள்வது என்பது அத்தனை அவசியமானது, அது அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டுவதோடு தன்னைச் சுற்றியுள்ளவர்களது நம்பிக்கைகளையும் வலுப்படுத்த உதவுகின்றது. இவர்கள் அழகுக்கலை நிலையங்களில் மாத்திரம் அன்றி வீடுகளிலும் மிக எளிதாக சமையலறையில் உள்ள பொருட்களைக் கொண்டு தங்களை அழகுப்படுத்திக் கொள்ளக் கூடிய வழிமுறைகளை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

அதிக பண செலவு இன்றி பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்ளவும் முடியும், ஆனால் அவர்கள் தங்களுக்காக ஒதுக்கும் நேரங்கள் மிகக் குறைவாகவே இருக்கிறது ,அதனால் தான் அழகு கலை நிலையங்களை தேடி வருகிறார்கள்.

கரடு முரடான தோற்றங்களோடு வரும் ஒருவரை அழகாக அனுப்பும்போது நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அவருடைய நம்பிக்கைக்கு நான் அத்திவாரம் இட்டிருக்கிறேன் என்பதில் எனக்கு ஒரு சந்தோஷம் கிடைக்கிறது என்று நெகிழ்ச்சியாக பதில் அளிக்கிறார்.



சுரேக்கா சிவகாந்தன்



**அழகுக் கலையோடு மாத்திரம் நின்று விடாமல்,**

**தனது ஆத்ம திருப்திக்காக பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டிருக்கும் இவரிடம், உங்களுடைய எதிர் கால திட்டங்கள் பற்றி அல்லது கனவுகள்பற்றி சொல்லுங்கள்?** என்று வினாவினோம்

இந்தத் துறையில் இன்னும் அதிகமாக கற்க வேண்டும், இந்தியா தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு சென்று அங்கே உள்ள அழகு கலை தொடர்பான விடயங்களை கேட்க வேண்டும், எனது தொழிலில் நான் இன்னும் வளர வேண்டும், ஒரு காலத்தில் நான் பிரசித்தம் பெற்ற ஒரு அழகு கலை நிபுணராக இருக்கும் பொழுது உண்மையில் தேவையுள்ள பலருக்கு இலவசமாகவே சேவைகளை வழங்குவ தோடு பல பெண்களுக்கு அழகு கலை தொடர்பான பயிற்சிகளையும் வழங்கி அவர்களை ஒரு சுய தொழில் முயலுனர்களாக மாற்ற வேண்டும் என்று தனது பெரிய கனவை கண்கள் விரிய சொல் கிறார்.

இவள் ஓடிக் கொண்டிருக்கும் நதி..

எத்தனை தடங்கல்கள் வந்தாலும் தனது பயணத்தில் மிக உறுதியாக இருக்கிறார் இவர்,

தான்தன்னுடையபயணம் என்று நிற்காமல் இன்னும் பலருக்கும் இந்த கலையினை பயிற்றுவிப்பதற்கும்ஆவலோடு இருக்கும் இவரிடம்

**பல குடும்பச் சுமைகளோடு சமூகத்தில்பாராடிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?** என்று வினாவினோம்

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான திறமைகள் ஒளிந்திருக்கும், அந்த திறமைகளை இனம் கண்டு அவற்றிற்கான பயிற்சிகளையும், களங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக பெண்கள் தமக்கான தேவைகளை தாம் நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒரு தொழிலை தமது கைகளில் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.

நமது கடும் உழைப்பின் நிமித்தம் நமக்கு கிடைக்கும் சிறிய தொகையில் நமது தாய்க்கோ அல்லது குடும்பத்தினருக்கு நாங்கள் வாங்கிக் கொடுக்கும் ஒரு சிறிய பொருள் கூட மிகச் சிறந்த ஆத்ம திருப்தியையும் சந்தோஷத்தையும் நமக்கு நிச்சயமாக தரும் என்கிறார்.

இப்படி குட்டி குட்டி கனவுகளோடு ஆரம்பித்து , இன்று கொழும்பு ,யாழ்ப்பாணம் என்று தனது அழகுகலை வியாபார நிலையத்தினை விஸ்தரித்து மிகவும் பிரபலமான அழகு கலை நிபுணராகவும் அழகு கலை ஆசிரியராகவும் திகழும் சுரேகா சமூகத்தில் பல பெண்களுக்கு முன்மாதிரியாக திகழ்வார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் எல்லாம் சிறுவர்கள் தொழில் கல்வியை கற்றுஅதன் மூலம் கல்வி கற்கும் காலங்களிலேயே தமக்கான தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வாறு வளர்கின்றனர், நிச்சயமாக நாங்களும் அவ்வாறு வளர வேண்டும் . பெண்கள் வன்முறைக்கு எதிரான மற்றும்அடக்குமுறைகளுக்கு உள்ளிருந்து வெளிவர வேண்டும் தமக்கென ஒரு வழியை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உறுதிப்பட பேசிய இவரிடம் இருந்து மகிழ்ச்சியோடு விடை பெற்றோம்.



# இயற்கை முறை நிலக்கடலை பயிர்செய்கை

**மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசல் அல்லது மீன் அமிலம் போன்ற இயற்கை பயிர் வளர்ப்பு ஊக்கிகளை வாரத்திற்கு ஒரு தடவை தொடர்ந்து கொடுப்பதன் மூலம் அதிகளவான விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியும் அத்தோடு திரட்சியான கடலைகளை பெறலாம் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.**



**ஆனந்தன் பிரேம்நாந்**
**லக்சி பண்ணை**



நிலக்கடலை ஒரு வெப்ப மண்டல பயிர் என்பதோடு 99 வீதம் மேட்டு நிலத்தில் நிலத்தில் மட்டும் பயிரிடப்படுகின்ற பயிராகும். பள்ளக்காணிகளில் பயிரிடப்படுவது மிக மிகக் குறைவு. நிலக்கடலை ஆனது ஆசிய நாடுகளில் குறிப்பாக தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நிலத்தில் 10 டன் தொழுஉரம் இட்டு உழவு செய்ய வேண்டும். ஆனால் நடுவதற்கு இரண்டு மாதம் முன்பே வயலில் இட்டு உழுது விட வேண்டும் . அல்லது சணப்பை ஏக்கருக்கு இருபது கிலோ விதைத்து நன்கு வளர்ந்து பூ அல்லது பிஞ்சுகள் தோன்றும் சமயத்தில் மடக்கி நன்றாக உழவு செய்து பின் இரண்டு மாதம் கழித்து நிலக்கடலை நடுகை செய்யலாம்.

ஏக்கருக்கு கிட்டத்தட்ட 40 முதல் ஐம்பது கிலோ விதை போதுமானது. ஏர் அல்லது டிராக்டர் மூலம் விதைக்கலாம். கண்டிப்பாக போதுமான ஈரப்பதம் வேண்டும். கோது உடைத்த விதைகளாக இருந்தால் நட்டு மூன்றாம் நாளில் முளைத்து விடும். உடைக்காமல் முழு விதைகளாக நடுவதாக இருந்தால் நட்டு ஐந்தாவது நாள் முளைக்கும். நடும் பொழுது வரிசைக்கு வரிசை 45 செமி இடைவெழியும். செடிக்கு செடி 15 செமி இடைவெளி இருக்க வேண்டும். 15 சென்டிமீட்டர் இடைவெளியில் நடுவதாக இருந்தால் ஒரு விதை வீதமும் 20 சென்டிமீட்டர் இடைவெளியில் நடுவதாக இருந்தால் இரண்டு விதைகள் வீதம் நடுகை செய்யலாம் அதாவது ஒரு சதுரமீட்டரில் 18 செடிகள் போதுமானது.

விதைநேர்த்தி செய்யும் போது கட்டாயம் நடுகை செய்யத் தேவையான விதைகளில் 50 கிலோ விதைகடலைக்கு மூன்று கிலோ கிளிஞ்சல் சுண்ணாம்பு தூள், இரண்டு கிலோ சாம்பல் கலந்து விதைக்கலாம். இவ்வாறு செய்வதனால் வேர் சம்பந்தப்பட்ட நோய்கள் தாக்காமல் முற்றிலும் தடுக்கலாம்.

சில இடங்களில் எலிகள் மற்றும் முயல், மயில் போன்றவற்றின் தொல்லை அதிகமாக இருக்கும் பட்சத்தில். விதைகள் முளைத்த நாளிலிருந்து ஏழாம் நாள் நன்கு பழுதான அதாவது அழுகிய இரண்டு முட்டைகளை எடுத்து 10 லிட்டர் நீரில் நன்றாக கலந்து. செடிகள் நன்றாக நனையும் அளவிற்கு. மருந்து அடிக்கும் கருவியின் ஊடாக தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வத னால் நடப்பட்ட விதைகளை உண்ணும் நோக்கில் எந்த ஒரு பிராணிகளும் அவ்விடத்திற்கு வராது. ஒவ்வொரு வார மும் இந்தக் கலவையினை உற்பத்தி செய்து பயன்படுத்தலாம் ஆனால் செடிகள் பூக்க ஆரம்பித்தால் இந்த கலவையை. தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும்.





முளைத்ததில் இருந்து. 20, 25 ஆம் நாள் முதல் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். விதைகள் முளைத்த நாளிலிருந்து பொதுவாக இரண்டு தடவை களைஎடுக்க வேண்டும். அதாவது முளைத்து பதினைந்தாவது நாளில் ஒரு தடவையும். மற்றும் நாற்பதாவது நாளில் இரண்டாவது தடவையும் களை எடுக்க வேண்டும். இதில் இரண்டாவது களை எடுக்கும் போது கட்டாயம் மண் அணைக்க வேண்டும். இதுவே பெரிய இடைவெளியில் விதைகள் நடப்பட்டிருந்தால் இரண்டாவது களையெடுப்பின் பின் மண்ணணைப்பின் போது கிளைகளை மடக்கி அதன் மேல் மண்ணணைத்து வந்தால் இன்னும் அதிகமான விளைச்சலை பெறக்கூடியவாறு இருக்கும்.

இந்த மாதிரியான விவசாய முறைகளை ஒரு சில பண்ணையாளர்கள் மட்டுமே கடைப்பிடிக்கின்றார்கள். நிலக்கடலை பயிருக்கு அதன் வாழ்நாளில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு தடவை வீதம் தண்ணீர்பாய்ச்சினால் போதுமானது. முற்றிலும் இயற்கை முறையில் நடுகை செய்யும் போது வாரத்தில் ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதுமானது. இதுவே பள்ளக்காணியாக இருந்தால் மண்ணின் ஈரப்பதத்தை அறிந்து நீர் பாய்ச்ச வேண்டும் மாறாக மண்ணில் ஈரப்பதன் அதிகமாக இருந்தால் வேர் அழுகல் போன்ற நோய்கள் கட்டாயம் ஏற்படும்.

மேம்படுத்தப்பட அமிர்த கரைசல் அல்லது மீன் அமிலம் போன்ற இயற்கை பயிர் வளர்ப்பு ஊக்கிகளை வாரத்திற்கு ஒரு தடவை தொடர்ந்து கொடுப்பதன் மூலம் அதிகளவான விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியும் அதோடு திரட்சியான கடலைகளை பெறலாம் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

முதல் களை எடுத்த பின் தண்ணீர் பாய்ச்சிய மறுநாள் கட்டாயம் பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தம் அல்லது இரசாயன உரம் இடவேண்டும். முடிந்தவரை இயற்கையான முறையில் உற்பத்தி செய்வதே எமக்கும். எமது அடுத்த தலைமுறையினருக்கும் சிறந்ததாக இருக்கும்.

100 முதல் 105 நாட்களில் அறுவடை செய்யப்படும் நிலக்கடலைகளை மட்டுமே விதைக்குரிய நிலக்கடலையாக பயன்படுத்தலாம். ஒரு சில விவசாயிகள் 90 ஆவது நாளிலே அறுவடை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் இவற்றை விதைகளுக்கு பயன்படுத்த இயலாது காரணம் இவற்றைக் காயவைத்து எடுக்கும் போது நிலக்கடலை விதைகளில் சுருக்கம் ஏற்பட்டு முளைத்திறன் குறைந்து விடும்.

எதிர்காலத்தில் எமக்கு போதுமான விளைச்சலையும் கொடுக்காது. இந்த விடயத்தில் விவசாயிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் ஏக்கருக்கு காய்ந்த நிலக்கடலை. 40 கிலோ மூட்டை. குறைந்து 30 மூட்டைகள் விளைச்சல் வரவேண்டும். அப்போது தான் முழுமையான விளைச்சல் என்று அர்த்தம். ஒவ்வொரு செடியிலும் 20 க்கும் அதிகமான நிலக்கடலைகள் இருந்தால் அது சிறந்த விளைச்சலாக கருதப்படும்.



# வீட்டிலிருந்து அலுவலக வேலை: தொழில் திறனை அதிகரிக்குமா?

**வீட்டிலிருந்தே அலுவலகப் பணிகளைச் செய்யும்போது பணியாளர் மிகவும் சுதந்திரமாக உணர்கிறார் என்கிறது ஆய்வு. எனக்கு நானே ராஜா எனப் பணிபுரியும் இவர்களுக்கென தனியாக சில சட்ட விதிகளையே சில நிறுவனங்கள் உருவாக்கியிருக்கின்றன.**

கார்டில்யா யாமினி

தகவல் தொழில்நுட்பத் துறையில் மட்டும் நடைமுறையில் இருந்த 'வொர்க் ஃப்ரம் ஹோம்' கலாசாரம் தற்போது அனைத்துத் துறைகளிலும் வந்துவிட்டது.

இந்த முறையானது கொரோனா காலத்தில்தான் அதிகம் பிரபலமானது. அப்போது பலரும் விருப்பம் இல்லாமல் வீட்டில் இருந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள். கோவிட் காலகட்டம் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், இன்றும் பல அலுவலகங்கள் தங்களது ஊழியர்களை வீட்டில் இருந்து வேலை செய்ய சொல்கிறார்கள். மூன்று நாள் அலுவலகம், மூன்று நாள் வீடு என்கிற 'ஹைப்ரிட்' இரட்டை மொடல் வேலைகளும் அதிகரித்துவிட்டன.

கொஞ்சம் வீடு, கொஞ்சம் அலுவலகம் என்கிற இந்தச் சூழ்நிலையில், வீட்டிலிருந்து அலுவலகப் பணிகளைச் செய்வது நல்லதா, கெட்டதா? இதில் என்னென்ன நன்மைகள் உள்ளன என்பதை இப்போது பார்க்கலாம்.

சுதந்திரமாக வேலை பார்க்கலாம்...

வீட்டிலிருந்தே அலுவலகப் பணி களைச் செய்யும்போது பணியாளர் மிகவும் சுதந்திரமாக உணர்கிறார் என்கிறது ஆய்வு. எனக்கு நானே ராஜா எனப் பணிபுரியும் இவர்களுக்கென தனியாக சில சட்ட விதிகளையே சில நிறுவனங்கள் உருவாக்கியிருக்கின்றன.

வீட்டில் இருந்து வேலை பார்ப் பவர்கள், தங்களைத் தாங்களே ஊக்கு வித்துக்கொள்ள, வளர்த்துக்கொள்ள என நிறைய டெக்னிக்குகள் இருக் கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, பயிற்சிகள் மேற்கொண்டு தங்கள் திறன் களை இவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதனால் இவர்களுக்கு செய்யும் வேலையில் கூடுதல் கவனம் ஏற்படுகிறது. குறிப்பாக, காலை, மதியம், மாலை என எப்போது இவர்களின் புரொடக்டிவிட்டி லெவல் அதிகமாக இருக்குமோ, அப்போது கூடுதல் திறனுடன் பணி புரியலாம்.

அலுவலகத்தில் பணிபுரியும்போது நமது வேலைகளை உற்றுப் பார்த்து கவனிக்கும் மைக்ரோ மேனேஜ்மென்ட் என்கிற உயரதிகாரிகளின் பிரச்னைகள் இல்லாமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல் சுதந்திரமாக வேலை செய்யலாம்.

இப்படி வீட்டிலிருந்து பணிபுரிவதால் கிடைக்கும் நன்மைகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் நாம் இங்கே பார்க்கலாம்.




கொழும்பு போன்ற பெருநகரங்களில் பெரும்பாலான நிறுவனங்கள் மூன்று



ஷிஃப்டுகளும் இயங்குவதால், எப்போதுமே சாலைகளில் போக்குவரத்து நெரிசல் மிகுதியாக இருக்கும். இதில் நாம் வீட்டிலிருந்து கிளம்பி, அலுவலகம் போய் சேர்வதற்குள், போதும் போதும் என்றாகிவிடும். இதில் இடையில் எங்காவது ஆர்ப்பாட்டம், போராட்டம், விபத்து என்று பெரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி, நேரத்துக்கு அலுவலகத்துக்குச் செல்ல முடியுமா, முடியாதா என டென்ஷனாகி, பதற்றத்துடன் பரபரப்பாக அலுவலகம் செல் வதற்குள், நமக்கு மன அழுத்தம் அதிகரித்து, புரொடக்டிவிட்டி லெவல் குறைந்து, ஏனோதானோவென பணிபுரியும் சூழல் ஏற்பட்டுவிடும்.

ஆனால், வீட்டிலிருந்து பணிபுரியும் சூழலில் மேற்குறிப்பிட்ட பிரச்னைகள் ஏதுமன்றி செயல்படலாம். நிறைய நேரமும் மிச்சமாகும். நமது புரொடக்டிவிட்டியை வேலையில் காட்ட வாய்ப்பு ஏற்படுகிறது.

வீட்டிலிருந்து பணிபுரியும்போது போக்குவரத்து செலவு இல்லை எரிபொருள் செலவு இல்லை. அலுவலகத்துக்கு டிப்டாப்பாகச் செல்வதற்காக உடைகள், காலணிகள், மேக்கப் சாதனங்கள் வாங்குவதற்காக அடிக்கடி செய்யும் செலவு, பணியின் இடையிடையே செய்யும் நொருக்குத் தீனிச் செலவு என ஏராளமான செலவுகள் குறைந்து பெருமளவு பணம் மிச்சமாகும்.

வீட்டிலிருந்து பணிபுரியும்போது மூன்றே மாதங்களில் நமது சேமிப்புத் தொகை கணிசமாக உயருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

நமது வீட்டில் அமைதியான, வேலைக்கேற்ற வசதியான சூழலில், சுதந்திரமாகச் செயல்படும்போது இயல்பாகவே நம் புரொடக்டிவிட்டி அதிகரிக்கிறது.

வீட்டிலேயே வேலை செய்யும்போது, நாம் நினைக்கும்போது, வேலையிலிருந்து சிறு இடைவெளி எடுத்துக் கொண்டு, சற்றுக் காலாற நடக்கலாம் ஒரு காபி குடிக்கலாம். குழந்தைகளுடன் பேசலாம் என மிகுந்த மனநிறைவுடன் பணிபுரிவதால், மன அழுத்தம் ஏதுமின்றி, உற்சாகதுடன் பணிபுரிய முடிகிறது.

அதிகரிக்கும் தொழில்நுட்ப அறிவு...

அலுவலகத்தில் பணிபுரியும்போது, நாம் நமக்கென ஒதுக்கப்பட்ட பணியை மட்டும்தான் செய்வோம். ஆனால், வீட்டிலிருந்து பணிபுரியும்போது, நமக்கு ஒதுக்கப்பட்ட வேலையை முடித்துவிட்டு, தகவல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்புவது, சந்தேகங்களை ஆன்லைன் மூலமாகத் தெளிவுபடுத்திக் கொள்வது,

ரிப்போர்ட் அனுப்புவது என நிறைய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் நம்மை அறியாமல் தொழில்நுட்ப அறிவு வளர்கிறது.

நிறைய பேர் இதுவரை தம் வாழ்நாளில் பயன்படுத்தியே இருக்காத பல்வேறு மென்பொருள்கள் மற்றும் ஆப்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

உதாரணமாக, வீட்டிலிருந்தே பணி புரியும் போது, ஸ்கைப், ஜூம் மீட்டிங்கள், எம்.ஐ.எஸ், தரவுகளை பல்வேறு துறைகளுக்கிடையே அனுப்புவது எனப் பல்வேறு விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படு கிறது. இதனால் பல்வேறு தொழில்நுட்ப விஷயங்களைக் கற்றுக் கொள்ள வீட்டிலிருந்து பணிபுரியும் சூழல் உதவுகிறது.

வீட்டிலிருந்தே பணிபுரிய வேண்டியிருப்ப தால், நமது துறை வேலைகளை மட்டுமன்றி, பிற துறை சார்ந்த நபர்களுடனும் பேச வேண்டிய சூழல் ஏற்படுகிறது, இதனால் அனைத்து துறை சார்ந்த நபர்களுடன் நல்ல உறவு ஏற்படுவதுடன், அனைத்துத் துறை சார்ந்த அறிவும் மேம்படுகிறது. குறிப்பாக, அலுவலகத்துக்குச் சென்றால்கூட நாம் பேச வாய்ப்பு ஏற்படாத உயரதிகாரிகளுடன் கூட, ஆன்லைன் மீட்டிங்கில்பேச முடிகிறது.

அலுவலகத்தில் பணிபுரியும்போது, உடன் பணிபுரிபவர்கள் நம்மிடம் பேசுவது, அலுவலகச் சாதனங்களில் ஏற்படுத்தும் இடையூறுகள், விடாமல் தொடர்ந்து சிணுங்கும் போன்கள், ஒரு வேலையைச் செய்துகொண்டிருக்கும்போதே மற்றொரு வேலையைச் செய்யச் சொல்வது என நம் வேலையில் கவனச் சிதறலை ஏற்படுத்தும் எந்தவொரு விஷயமும் வீட்டில் இருந்து பணிபுரியும் சூழலில் இல்லை. இதனால் நமக்கேற்ற சூழலில் சிறப்பாகப் பணிபுரிய முடிகிறது. இதனால் நமது புரொடக்டிவிட்டியும் அதிகரிக்கிறது.

சில நிறுவனங்கள் தங்கள் ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிய சிறப்புப் படிகள் (Allowances) வழங்குகின்றன. ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிவதால், நிறுவனத்துக்கு நிறைய பணம் மிச்சமாவதால், பொருளாதார ரீதியாக நிறுவனத்துக்கு நல்ல இலாபம் கிடைக்கும்.

எனவே, நிறுவனங்கள், தங்களது பணியாளர் களுக்கு போன் பில், இணைய பில் போன்ற சில படிகளை வழங்கி வீட்டில் இருந்தே பணிபுரிவதை ஊக்குவிக்கின்றன.

வீட்டில் இருந்து வேலை செய்வதால், விடுமுறை மற்றும் பர்மிஷன் எடுக்க வேண்டிய தேவையே வருவதில்லை. வேலைக்கு நடுவிலேயே சின்னச் சின்ன நமது வீட்டு வேலைகளையும் செய்ய முடிவதால், மிகவும் சுதந்திரமாகவும் வசதியாகவும் மன அழுத்த மின்றியும் பணிபுரிய முடிகிறது. இதனால் எந்தவொரு சவாலான வேலையையும் எளிதாக முடிக்க முடிவதால், வேலையிலும் முழு திருப்திகிடைக்கிறது.

இப்படி பல நன்மைகள் இருந்தாலும், பல தரப்பட்ட பிரச்னைகளும் சிக்கல்களும் வீட்டில் இருந்து வேலை செய்யும் சூழலில் உருவாகின்றன. அவை என்னென்ன என்பது குறித்து மற்றொரு வாரத்தில் அத்தியாயத்தில் பார்க்கலாம்.

# விவசாயத்தில் புதுமைகளை கொண்டாடும் இந்திரா குழுமம்

**நெல் நடவு தொழில்நுட்பம் மூலம் தனக்கு இந்த நிலத்தில் சென்ற முறையுடன் ஒப்பிடும் பொழுது 60மூ மகசூல் அதிகரிப்பதாக விவசாயி வேந்தன் தெரிவித்தார். சென்றமுறை தத்தி தாக்கத்தினால் பெருமளவு விவசாயிகளுக்கு விளைச்சல்குறைந்துஇருந்தமை இங்கே குறிப்பிட்டு ஆக வேண்டியது. பல வருடங்களுக்குப் பின்னர் இந்த முறை நெல் விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்று வருகிறார்கள்.**

விவசாயத் திணைக்களத் (விரிவாக்கம்) உடன் இணைந்து கிளிநொச்சி புதுமுறிப்பில் 2024.08.09அன்று வெற்றிகரமாக "இயந்திர நெல் நடவு அறுவடை விழா" வை கொண்டாடியது இந்திரா குழுமம்.

இலங்கையின் பல பாகங்களில் உள்ள விவசாயிகள் பல்கலைக்கழக மாணவர்கள், விவசாய பேராசிரியர்கள் போதன ஆசிரியர்கள் என்று பலரை தன்னுள் அடக்கியபடி விவசாயத்தில் ஒரு புதிய புரட்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது இந்திரா குழுமத்தின் மூலம் .

மிகவும் உத்வேகமாக விவசாயத்தில் நவீன புரட்சி ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் இந்திரா குழுமத்தின் தலைவர் ரஜீதன் மகேஸ்வரன்.

இந்தக் குழுவினரின் அத்தியாயங்களில் ஒன்றாகத்தான் மிகச் சிறந்த முறையில் இயந்திர நெல் நடவு மற்றும் அறுவடை விழாவை கொண்டாடி இருக்கின்றனர் விவசாயிகள் அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பகிரதன் மற்றும் பண்ணை முகாமையாளர் திரு ஸ்ரீதரன் என்பவர் களுடன் விவசாய போதனாசிரிஎயர்கள் செல்வி கிசாணி திரு அஸ்லி , அவர்களுடன் விவசாயத் திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளர் திருமதி ஜெகதீஸ்வரி அவர்களுக்காக கலந்து கொண்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் (SMO) ஸ்ரீ ரூபி அவர்களுடன் ,

நெல் ஆராய்ச்சி நிலையம் - பரந்தன் மற்றும் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் என்பனவற்றின் இயக்குனர் திரு சிவனேசன், விதை மற்றும் நடுகை உற்பத்தி திணைக்களத்தின் இயக்குனர் திரு ஜோகேஸ்வரன், கமநல சேவை மையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் திரு கிங்ஸ்லி , நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர்கள் (பொறியியலாளருக்காக) HNB வங்கி அதிகாரிகள், Commercial Bank மேலாளர் (வங்கி பங்குதாரர்களாக) ஆகியோர் பங்கேற்றனர்.

மங்கள விளக்கு ஏற்றுவதுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிகழ்வில் அறுவடைக்கு தயாராக இருந்த வயல் விவசாயி வேந்தனினால் வயலை சுற்றி காண்பிக்கப்பட்ட பின்னர் வருகை தந்த அலுவலர்கள் அதிகாரிகளின் ஆசி உரைகள் சிற்றுரைகள் இடம் பெற்றன.

மேற்படி சிற்றுரைகள் ஆசி உரைகளின் பொழுது அரச அலுவலர்கள் அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் இந்திரா குழுமத்துடன் இணைந்து பயணிக்கும் இளைஞர் குழுவுக்கு மிகவும் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டார்கள்

பின்னர் இந்திரா குழுமத்தின் தலைவர் மகேஸ்வரன் ரஜிதன் உரையாற்றுகையில் மேற்படி இளைஞர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். மேற்படி இளைஞர்களுடன் இந்த வருடம் 2024 புதிதாக இணைந்து கொள்ளும் மேலும் 20 வரையிலான யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி மற்றும் குளியாப்பட்டிய பல்கலைக்கழக கல்லூரி என்பனவற்றை சேர்ந்த பண்ணை இயந்திரவியல் கற்கும் மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

33.5 பைகள் (1 ஏக்கரில் 2412 கிலோ நெல் அறுவடை செய்யப்பட்டது. நெல் நடவு தொழில்நுட்பம் மூலம் தனக்கு இந்த நிலத்தில் சென்ற முறையுடன் ஒப்பிடும் பொழுது 60% மகசூல் அதிகரிப்பதாக விவசாயி வேந்தன் தெரிவித்தார். சென்றமுறை தத்தி தாக்கத்தினால் பெருமளவு விவசாயிகளுக்கு விளைச்சல் குறைந்து இருந்தமை இங்கே குறிப்பிட்டு





ஆக வேண்டியது. பல வருடங்களுக்குப் பின்னர் இந்த முறை நெல் விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்று வருகிறார்கள். எனவே இம்முறை ஏனைய சாதாரண வீசி விதைத்த அயல் விவசாயிகளின் வயல்களின் விளைச்சலுடன் ஒப்பிடும் பொழுது இப்போது 10 தொடக்கம் 15 சதவீத விளைச்சல் அதிகரித்திருக்கின்றது என மகிழ்ச்சியோடு கூறுகின்றனர்..

விவசாய பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி பேராசிரியர் பகிரதன் அவர்கள் உரையாற்றுகையில் இந்திரா குழுமம் காலத்துக்கு தேவையான விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி செய்து காட்டியும் வருவதற்கு பாராட்டுகளை தெரிவித்தார். மேற்படி செயல் திட்டங்களில் இணைந்து பணியாற்றும் விவசாய ஆர்வம் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டார்.

நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குனர் திரு சிவனேசன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் அதிகரித்த வெப்பநிலை காரணமாக மகரந்தங்கள் பாதிக்கப்பட்டு 25- 35 சதவீதமான நெல் மணிகள் முழுமை அடையாமல் சப்பியாக இருப்பதை அவதானிக்க கூடியதாக கூறினார். இந்திரா குழுமம் மற்றும் விவசாயிகள் மென்மேலும் இது தொடர்பான தொழில்நுட்பங்களை கையகப்படுத்தி நுட்பமாக செய்யும் பொழுது மேலும் விளைச்சலை அதிகரிக்க ஏதுவாக இருக்கும் என கூறினார்.



விதை நெல் நடுகை பொருள் உற்பத்தி நிலையத்தின் இயக்குனர் திரு யோகேஸ்வரன் அவர்கள் உரையாற்றுகையில் இயந்திர நெல் நாற்று நடுதல் மூலம் கலப்பின நெல் மற்றும் காட்டு நெல் பண்டி நெல் என்பனவற்றின் தாக்கத்தை குறைத்து சுத்தமான விதை நெல்லை உற்பத்தி செய்ய முடியும் என்று கூறினார்

விவசாயத் திணைக்களம் கிளிநொச்சி பணிப்பாளருக்கு பதிலாக வருகை தந்திருந்த பாடவிதான உத்தியோகத்தர் ஸ்ரீரூபி அவர்கள் கருத்து தெரிவிக்கையில் விவசாயத் திணைக்களமானது இந்திரா குழுமத்துடன் இணைந்து செயல்பட்டதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் எந்திரம் மூலம் நடப்பட்ட வயல்களின் எண்ணிக்கை நூறை தாண்டியதாக கூறினார்.

பிரதேச விவசாய போதனாசிரியர் செல்வி கிசானி அவர்கள் உரையாற்றுகையில் விவசாயி வேந்தன் அவர்கள் ஒரு முன்னோடி விவசாயி எனவும் பிரதேச கமக்காரர் அமைப்பில் அவர் செயலாளராகவும் இருப்பதாக கூறினர். மிகவும் ஆர்வத்துடன் அவர் இந்த முறை இயந்திர நடவில் ஈடுபட்டதாகவும் இவ்வாறான ஒரு வயல் விழாவை செய்ய வேண்டும் ஏனைய விவசாயிகளுக்கும் இந்த விடயம் போய் சேர வேண்டும் என்ற முயற்சியில் மிகவும் ஆர்வமாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

விவசாயி வேந்தன் அவர்கள் தனது அனுபவப் பகிர்வு கருத்துரையினை ஆற்றும் பொழுது, தனது நடவு செய்யப்பட்ட வயலில் நோய் தாக்கங்கள் இல்லாததால் வேளாண் இரசாயனங்களைக் குறைத்ததன் மூலம் உற்பத்தி செலவு தனக்கு 20-30% குறைந்துள்ளதாக கூறினார்.

முக்கியமாக தனது ஏனைய 10 ஏக்கர் வரையிலான வயல்களையும் வருகின்ற பெரும்போகத்தில் தான் நடவு செய்யப் போவதாக அறிவித்தார்.

மேலும் இயந்திர நடுகை காரணமாக அவர் தனது வயலில் களைநெல் காட்டு நெல் பண்டிநெல் என்பனவற்றினை திறம்பட கட்டுப்படுத்தினார். அதனால் அறுவடை செய்த நெல் முழுவதையும் ூவிதை நெல்ூ என்று அவரால் அதிக விலைக்கு விற்க முடிந்தது. இன்னும் சிறப்பாக சொல்வதானால் இவரிடம் விதை நெல்லுகாக கோரி இருந்த விவசாயிகள் அறுவடை நிகழும் பொழுது காத்திருந்து அறுவடை முடிந்த பின்னர் பச்சையாகவே இவரது நெல்லை விதை நெல்லுக்காக கொள்வனவு செய்து, கொண்டு சென்று காய வைப்பதாக கூறிச் சென்றார்கள் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்? என்று கேட்டதற்கு"வேந்தனிடம் காய வைத்து எடுப்பதற்குள் வேறு ஆட்கள் முந்தி விடுவார்கள்" என்பதனால் தாம் அவ்வாறு செய்வதாக கூறிச் சென்றுள்ளார்கள். மேற்படி சிறிய சிறிய மாற்றங்களை விவசாயத்திற்குள் புகுத்துவதன் மூலம் எமது உற்பத்திகளுக்கான வரவேற்பினை நாங்கள் பெற்றுக் கொள்வதோடு, நமது அடுத்த சந்ததிக்கும் ஒரு மிகப்பெரும் வரத்திணை விட்டுச் செல்லலாம் என்று நிச்சயமாக நம்புவோம்.

# சிறுதானியங்களும் பெரு நன்மைகளும்

பூரணி

**சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப்பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.**



நம் முன்னோர்களால் ஆதி காலத்திலிருந்தே உண்ணப்பட்டுவந்த ஆரோக்கியமான உணவில் முதல் இடத்தைப் பிடிப்பவை சிறுதானிய வகைகளான குதிரைவாலி, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் போன்றவைதான். அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானியங்கள் ஏழைகளின் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலை மாறி, சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது.

உடலுக்கு நல்லது என்று பல உணவு வகைகளைப் பயன்படுத்தும் நாம், சிறுதானிய உணவுகளை உண்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டோம். ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் சிறுதானியங்களில் உள்ளன. சிறுதானியங்களில் நார்ச் சத்து, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதால் நாம் உண்ணும்போது நம் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப்பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.

இதிலுள்ள மாவுச்சத்து மெதுவாகச் செரிமானமாவதால் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு ஆகும். சிறுதானியங்களில் உள்ள லிக்னின் என்ற பொருள் மருத்துவக் குணம் உடையது. இது குடல் சுத்தமாவதற்கு மிகவும் உதவுகிறது. மாதவிடாய் பிரச்சினை, இதய நோய், ரத்த அழுத்தம் போன்றவற்றைச் சீராக்கும் வல்லமை சிறுதானிய உணவுக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஆஸ்துமா, தும்மல் போன்ற பிரச்சினைகள் வராமல் சிறுதானியங்கள் தடுக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள பாஸ்பரஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் உடல் செல்களை உறுதிப்படுத்தி எலும்புகளுக்கு உறுதி அளிக்கின்றன.

சிறுதானிய பயிர்செய்கையால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை நம்முடைய சூழலுக்கு எவ்வாறு ஏற்றதாக உள்ளன என்பது பற்றியும் பெரும் பகுதியினருக்குத் தெரிவதில்லை. சிறுதானியங்கள் எளிதாக அனைவரும் பயிர் செய்ய ஏதுவான பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. நெல் விளைவதற்கு 120-180 நாட்கள் மற்றும் அதிக அளவு தண்ணீர் (1,000 - 4,500 மி.மீ) தேவைப்படும். ஆனால், சிறுதானியங்களுக்கு குறைவான அளவு தண்ணீர் (250-400 மி.மீ) இருந்தாலே போதுமானது.

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அதாவது 65-90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரக்கூடியவை, மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம், மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்றவை, வறட்சியைத் தாங்கி வளரக் கூடியவை, சிறுதானியங்கள் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதல் மிகக் குறைவு. மற்ற பயிர்களுக்குக் கொடுப்பதைப் போல அதிகமான ஊட்டத்தை சிறுதானியப் பயிர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை.

குறைவான அளவுக்குக் கொடுத்தாலே போதுமானது. நெல் மாதிரியான பகலில் 'பூக்கும்' பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறும்போது, அதிகமான வெப்பம் இருந்தால் சரியான முறையில் விதைகள் உற்பத்தியாகாது. ஆனால், சிறுதானியப் பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்துக் கொள்வதால், வெப்பநிலைப் பிரச்சினைகள் இல்லாமல் முழுமையான அளவில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும்.

புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானியச் பயிர்ச்செய்கையால் குறைந்த அளவு வேலையில், குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெரும் பங்கு வகிக்கிறது.

கொரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கியதிலிருந்து மக்களின் உணவு முறையில் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் நிறைந்த உணவு வகைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இந்நிலையில், இவ்வளவு சிறப்பு மிக்க நம் நிலத்தின் பயிர்களான சிறுதானியங்களிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, கவனம் செலுத்துவதன் மூலம் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி, விவசாய நிலங்களின் சூழலியல் சமநிலையையும் பாதுகாத்து சிறுதானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

தேவைப்படுகின்றது. இங்கே சில முக்கிய அம்சங்கள் உள்ளன:

» பரிமாற்ற விலை (Transfer Pricing): செயற்கையாக இலாபத்தை குறைந்த வரி அதிகார வரம்புகளுக்கு மாற்றுவதன் மூலம் நாடுகளுக்கிடையேயான வரி விகிதங்க ளில் உள்ள வேறுபாடுகளை சுரண்டலாம். சர்வதேச வரி ஒப்பந்தங்கள் இத்தகைய நடைமுறைகளைத் தடுப்பதையும், பெருநி றுவன இலாபங்களுக்கு நியாயமான வரி விதிப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

» வரி புகலிடங்கள் (Tax Havens): மிகக் குறைந்த வரி விகிதங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி வெளிப்படைத்தன்மை கொண்ட நாடுகள் வரிகளைத் தவிர்க்க விரும்பும் நிறுவனங்களை ஈர்க்கலாம். வரி தவிர்ப்பு நடைமுறைகளை கட்டுப்படுத்தவும், வரி விதிப்புகளில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கவும் சர்வதேச முயற்சிகள் நடந்து வருகின்றன.

» ஒத்திசைவு எதிராக போட்டி: ஆரோக் கியமான போட்டியை அனுமதிப்பதற்கு எதி ராக நாடு முழுவதும் வரி விகிதங்களை ஒத்தி சைப்பதன் தகுதிகள் குறித்து விவாதம் நடந்து வருகின்றது. ஒத்திசைவு ஒரு சமமான விளையாட்டுக் களத்தை உருவாக்கி, வரிப் போட்டியைத் தடுக்கும் அதே வேளையில், அது ஒரு நாட்டின் வரி முறையை அதன் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப மாற்றும் திறனைக் கட்டுப்படுத்தலாம்.

## நிலைத்தன்மை மற்றும் சமபங்கு மீது கவனம்

வரிக் கொள்கையின் சிக்கல்களை நாடுகள் வழிநடத்தும்போது, சில முக்கிய பரிசீலனைகள் வெளிப்படுகின்றன:

» நிலைத்தன்மை (Sustainability): ஒரு நிலையான வரி அமைப்பு பொருளாதார வளர்ச்சியைத் தடுக்காமல் அரசாங்கத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான வருவாயை உருவாக்க வேண்டும். செயல்திறன் மற்றும் வரிச்சுமைக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானது.

» சமபங்கு (Equity): ஒரு நியாயமான வரி அமைப்பு வெவ்வேறு வருமானக் குழுக்களுக்கு சமமாக வரிச்சுமையை விநியோகிக்கின்றது. முற்போக்கான வரிவி திப்பு இந்த இலக்கை அடைய உதவும், ஆனால் அதிகப்படியான உயர் விகிதங்கள் தடைகளுக்கு வழிவகுக்கும்.

» எளிமை(Simplicity): ஒரு சிக்கலான வரி முறை நிர்வாகத்திற்கு அதிக செல வுள்ள முறைமையாகவும் மற்றும் வரி செலுத்து வோருக்கு சுமையாக இருக்கும். வரிக் குறியீட்டை ஒழுங்குபடுத்துவது மற்றும் வரிச்சட்டத்தில் உள்ள குறைபாடுகளை குறைப்பதன் வாயிலாக செயல்திறன் மற்றும் இணக்கத்தை மேம்படுத்தலாம்.

» வெளிப்படைத்தன்மை (Transpa -rency): வரிக் கொள்கை வெளிப்படைத்தன் மை பொறுப்புக்கூறல் மற்றும் பொது நம்பிக்கையை ஊக்குவிக்கின்றது. வரி விதிமுறைகள் மற்றும் சேகரிக்கப்பட்ட வருவாய் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை அரசாங்கங்கள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

## சரியான தளத்தைக் கண்டறிதல்

வரிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இடையேயான உறவு என்பது ஒரு தொடர்ச்சியான புரியாத புதிராகும், இது பொருளாதார நிலைமைகள், சமூகத் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய போக்குகளின் அடிப்படையில் சரிசெய்தல் தேவைப்படுகின்றது. அனைவருக்கும் பொருந்தக்கூடிய தீர்வு எதுவும் இல்லை. கவனமாக பகுப்பாய்வு, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மை மற்றும் சமத்துவத் திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம், நியாயமான மற்றும் நியாயமான சமூகத்தை உறுதி செய்யும் அதே வேளையில், பொருளா தார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு நாடுகள் சரியான வரி தளத்தைக் கண்டறிய முடியும்.

## இலங்கையின் வரிகள்: அவை வளர்ச்சியை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதைப் பார்ப்போம்:

வரிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான பரஸ்பர தொடர்பு குறித்து இலங்கை பல்வேறு மாறுபட்ட தன்மைகளை வழங்குகின்றது. நாடு பல ஆண்டுகளாக பல்வேறு வரி கட்ட மைப்புகளை பரிசோதித்துள்ளது, மேலும் அதன் வளர்ச்சிப் பாதையில் ஏற்படும் தாக்கம் மிகவும் விவாதத்திற்கு உட்பட்டது.

இலங்கையின் வரி பல்வேறு மாறுபட்ட தன்மைகளை வழங்குகின்றது: இலங்கையின் வரி நிலப்பரப்பு பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கலவையான கடந்த கால தரவுகளை வழங்குகின்றது. நாடு VAT மற்றும் கலால் வரி போன்ற மறைமுக வரிகளில் பெரிதும் சார்ந்து காணப்படுகின்றது, நிலையான வருவாயை உருவாக்குகின்றது, ஆனால் இந்த வரி விதிக்கப்பட்ட பொருட்களுக்கு தங்கள் வருமானத்தில் பெரும் பகுதியை செலவழிக்கும் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மீது விகிதாசார சுமையை ஏற்படுத்துகின்றது. நிறுவன (கார்ப்பரேட்) வரி விகிதங்கள் ஏற்ற இறக்கமாக உள்ளன, அவற்றைக் குறைத்து முதலீட்டை ஈர்க்கும் சமீபத்திய முயற்சிகளாக காணப்படுகின்றன. இருப்பினும், இந்த உத்தியின் வெற்றி இன்னும் விவாதிக்கப்படுகின்றது. தனிப்பட்ட வருமான வரிப் பக்கத்தில், அதிக வருமானம் ஈட்டுபவர்கள் (6% மற்றும் 36% க்கு இடையில்) அதிக பணம் செலுத்தும் முற்போக்கான முறையை இலங்கை பயன்படுத்துகின்றது. இது நியா யத்தை உறுதி செய்கின்றது ஆனால் அதிக வருமானம் பெறுபவர்கள் கூடுதல் மணிநேரம் வேலை செய்வதிலிருந்து அல்லது அதிக வரி விகிதங்கள் காரணமாக அதிக ஊதியம் பெறும் வேலைகளில் ஈடுபடுவதைத் தடுக்கின்றது.

வளர்ச்சியில் தாக்கம்: இலங்கையின் வரிக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிக்கலான சவாலை முன்வைக்கின்றன. குறைந்த நிறுவன கார்ப்பரேட் வரிகள் முதலீட்டை ஊக்குவிக்கும், ஆனால் ஒட்டுமொத்த வரிச்சுமை மிக அதிகமாக இருக்கலாம், இது பொருளாதார நடவடிக்கைக்கு இடையூறாக இருக்கலாம். கூடுதலாக, விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளை அதிகமாக நம்புவது, நுகர்வு மற்றும் மெதுவாக வளர்ச் சியைக் குறைக்கலாம். விவகாரங்களை மேலும் சிக்கலாக்கும் வகையில், அரசாங்கத்தின் வருவாய் வசூலிக்கப்பட்ட போதிலும் இலங்கை குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு இடைவெளி யுடன் போராடுகின்றது. இந்த உட்கட்டமைப்பு பற்றாக்குறை வணிகத் திறனைத் தடுக்கின்றது மற்றும் நீண்ட கால வளர்ச்சி திறனைக் கட்டுப்படுத்துகின்றது. விஷயங்களை மோசமாக்க, நாட்டின் வளர்ந்து வரும் கடன் சுமை, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் முயற்சிகளில் முதலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் திறனைக் கட்டுப்படுத்தலாம், ஏனெனில் வருவாயின் கணிசமான பகுதி ஏற்கனவே இருக்கும் கடனுக்கு சேவை செய்வதை நோக்கி செல்கின்றது.

இலங்கை தனது வரி முறையை மேம்படுத்த பல வழிகளை எதிர்நோக்கி வருகின்றது. அதிக தனிநபர்கள் மற்றும் வணிகங்களை முறையான வலைக்குள் கொண்டு வருவதன் மூலம் வரி தளத்தை விரிவுபடுத்துவது கூடுதல் வருவாயை உருவாக்க முடியும். வரி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் வசூல் திறனை மேம்படுத்தலாம் மற்றும் இணக்கத்தை ஊக்குவிக்கலாம். கண்டுபிடிப்பு, ஏற்றுமதி அல்லது வேலை உருவாக்கம் போன்ற மூலோபாயத் துறைகளுக்கான இலக்கு வரிச் சலுகைகள் வளர்ச்சியை மேலும் தூண்டலாம். மேலும், வருவாய் உருவாக்கம் மற்றும் பொறுப்பான செலவினங்களுக்கான சமநிலையான அணுகுமுறையின் மூலம் நிதிப் பொறுப்பை பராமரிப்பது மிகவும் முக்கியமானது. இதில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் சேகரிக்கப்படும் வரி வருவாயை திறமையாக பயன்படுத்துவதை உறுதி செய்வது ஆகியவை அடங்கும்.

பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த வரி முறையை வடிவமைப்பதில் உள்ள சவால் களை இலங்கையின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. வெவ்வேறு வரிக்கொள்கைகளின் தாக்கத்தை கவனமாகப் பரிசீலித்து, செயல்திறன், சமத்துவம் மற்றும் பொறுப்பான செலவினங் களை ஊக்குவிக்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம், நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வரிச் சூழலை இலங்கை உருவாக்க முடியும்.

+94-777-802-900 |
Email: swaminathan@agsarma.com

# நவீன யுகத்தில் ஒரு நிர்வாகியாக சிக்கல்களை கையாள்வது எப்படி?

சிறப்பான நிர்வாகியாக நம்மை உருவாக்கிக் கொள்ளும் வழிகளைச் சொல்லித் தருகிறது 'ஹௌ டு மேனேஜ்' (How to Manage) என்கிற புத்தகம். யுனைடெட் கிங்டமில் வசிக்கும் ஜோ ஒவென் (Jo Owen) எழுதிய புத்தகம் இது.

"ஒரு ஸ்மார்ட்டான மனிதராக இருப்பதும், ஒரு ஸ்மார்ட்டான முகாமையாளராக இருப்பதும் வெவ்வேறான விஷயங்கள். ஸ்மார்ட்டான மனிதர்கள் அனைவருமே சிறந்த முகாமையாளர் ஆவதில்லை. பிரசித்திபெற்ற நிர்வாகவியல் கல்லூரிப் பேராசிரியர்களில் பெரும்பாலானோர் சிறந்த நிர்வாகியாக ஜொலிப்பதில்லை.

ஆனால், கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்திய பலரும் வெற்றிகரமான நிர்வாகிகளாக இருப்பதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம், ஸ்மார்ட் என்பதையும் தாண்டி இன்னும் பல நுட்பமான நிர்வாகவியல் விஷயங்கள் இருக்கின்றன. அவை பற்றி விரிவாகச் சொல்லித் தருவதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்" என்று ஆரம்பிக்கும் புத்தகத்தின் ஆசிரியர், நடைமுறை நிர்வாகவியல் விஷயங்களைத் தெளிவுபடுத்துகிறார்.

"குழப்பமான இந்த உலகில் ஃபர்பெக்ட்டான என்கிற ஒன்று இல்லவே இல்லை. அப்படி ஒன்றைக் கண்டுபிடிக்க முயல்வது தவறு. ஏனென்றால், தொழிலைப் பொறுத்தவரை, ஃபர்பெக்ட் என்பது நடைமுறைக்குகளுக்கு பரம எதிரியாக இருப்பதால், ஸ்மார்ட் நிர்வாகிகள் இங்கேதான் தோற்றுப்போகிறார்கள்.

நிர்வாகம் என்பது ஒரு காலத்தில் சுலபமான விஷயமாக இருந்தது. நிர்வாகிகள், நிர்வாகிகளின் வேலையை செய்தார்கள். பணியாளர்கள் பணியாளர்களுக்கான வேலையைச் செய்தார்கள். நிர்வாகிகள் மூளையை உபயோகித்து வேலை செய்தார்கள். பணியாளர்கள் கைகளை உபயோகித்து வேலையைச் செய்தார்கள். அந்தக் காலத்தில் சிந்திப்பது மற்றும் செயல்படுவது என்கிற இரண்டு வேலைகளும் தனித் தனியானதாக இருந்தது. அது நிர்வாகிகளுக்கு பொற்காலமாக இருந்தது. பணியாளர்களுக்கு போதாத காலமாக இருந்தது.

ஒருகாலகட்டத்தில் இந்த நிலை மாறி நிர்வாகிகளுக்கு எல்லாம் தப்புத் தப்பாக நடக்க ஆரம்பித்தன. பணியாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைய உரிமைகளைப் பெற்றனர். நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்ட வசதிகள் குறைய ஆரம்பித்தன.




பணியாளர்களுக்கு குறிப்பிட்ட நேரம் மட்டுமே வேலை என்ற நிலை உருவானது. நிர்வாகிகள் நீண்ட நேரம் வேலை பார்க்க வேண்டி இருந்தது. ஈ-மெயில், ஸ்மார்ட் போன் எனப் பலவும் 24/7 என்கிற அளவில் தொந்தரவு தர ஆரம்பித்தன. கோவிட்-19-க்குப் பின் 'வொர்க்-ஃப்ரம்-ஹோம்' என்பது நடைமுறைக்கு வந்து இன்னும் நிர்வாகிகளைப் பாடாய்படுத்த ஆரம்பித்தது.

இதனால் நாளடைவில் நிர்வாகம் (Management) என்பது கடினமான பணியாக உருவெடுக்க ஆரம்பித்தது. மேலும் மேலும் நிர்வாகிகளின் பணிக் குழப்பம் அதிகமான ஒன்றாக மாற ஆரம்பித்ததே தவிர, குறையவில்லை. அதே சமயம், பணியாளர்களின் நிலை கிட்டத்தட்ட அப்படியேதான் தொடர்கிறது. பெரிதாக எந்த மாற்றமும் இல்லை.

ஒரு நிர்வாகி தன் பதவியைத் தக்க வைத்துக்கொள்ள எந்தளவுக்கு ரிஸ்க் எடுக்க வேண்டும், வெற்றிகரமான நிர்வாகியாகத் திகழ எந்தளவுக்கு ரிஸ்க் எடுக்க வேண்டும், இந்த நிறுவனத்தில் வேலை என்பது எப்படி செய்து முடிக்கப்படுகிறது, என் முதலாளியை எப்படி கையாளப் போகிறேன் என்கிற விஷயங்கள் குறித்து நிறுவனத்தின் கொள்கையில் எதுவும் இருக்காது. இவற்றுக்கெல்லாம் எந்தவிதமான பயிற்சியும் அளிக்க மாட்டார்கள். இது போன்ற முக்கியமான விஷயங்களில் சொந்தமாக சிந்தித்துதான் செயல்பட வேண்டும். இவற்றை யாரும் கற்றுத் தர மாட்டார்கள்.

ஒரு நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தவுடன் மற்றவர்கள் எப்படிச் செயல்படுகின்றனர் என்று கூர்ந்து கவனிக்கிறோம். அவர்களுடைய செயல்பாட்டை உள்வாங்கிக்கொண்டு அதன் அடிப்படையில் நாம் நம் பயணத்தைத் தொடங்குகிறோம். ஆனால், யாரால் இந்த கம்பெனி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே நீண்ட நாள் பிடிக்கும். நம்முடைய அனுமானம் பலமுறை தவறாகவும் போகும்.

அடிப்படையில் நிர்வாகிகளை எடை போட என்ன செய்வோம்? அந்தக் காலத்தில் நிர்வாகிகள் நல்ல மூளைக்காரர்கள். பணியாளர்கள் சிறந்த வேலைக்காரர்கள் என்ற அடிப்படையிலேயே அளவீடுகள் இருக்கும். புத்திசாலித்தனம் இருந்தால் அவர் நல்ல நிர்வாகி.

இதில் சிக்கலான விஷயம் என்னவெனில், ஒருவர் என்னதான் மூளைக்காரராக இருந்தாலும், அது மட்டுமே ஒரு நிர்வாகியை வெற்றி பெறச் செய்யும் தகுதியாகாது. அந்த அறிவைக்கொண்டு நிறுவனத்தில் செயல்பாடுகளை நிகழ்த்த வேண்டும். வெற்றிகள் கொண்டுவந்து சேர்க்கப்பட

வேண்டும். அதிக 'ஐ.யூ' கொண்ட ஸ்மார்ட் டான மனிதர்கள் பலரும் எதையும் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்க ளாக இருப்பார்கள்.

தவிர, ஒரு நிர்வாகிக்கு பணியாளர் களிடையே சுமுகமாக பழகி வேலை வாங்கவும், கடினமான சூழ்நிலைகளில் தன் கோபதாபங்களை சிறப்பாகக் கையாளவும் தெரிந்திருக்க வேண்டும். இதைத்தான் 'டீம் வொர்க்' என்கிறோம். ஒரு குழுவாகச் செயல்படும்போது உருவா கும் சிறப்பை எஃபெக்ட், கரிஷ்மா, மோட்டிவேஷனைத் தரும் திறன் என்ற பல ரூபங்களில் அளவீடு செய்து (எமோஷ னல் கோஷண்ட்-EQ) நிறுவனங்கள் பார்க்கின்றன.


ஒரு நிறுவனத்தில் இருக்கும் நிர்வாகிகளில் சிலர் ஸ்மார்ட் (IQ) மற்றும் உயர் பண்புடனான (EQ) மேனேஜர்க ளாக இருப்பார்கள். ஓரளவுக்கு ஸ்டீரியோ டைப் நபர்களும் இதில் இருப்பார்கள். அதைத் தவிர்க்க முடியாது. அதே நேரத்தில் ஸ்மார்ட்டான மற்றும் உயர் பண்பு உடைய பல நிர்வாகிகள் வெற்றிபெற முடியாமல் துவண்டு போய் நிறுவனத்தினுள் இருப்பார்கள். அவர்களுக்கு எந்தவித அங்கீகாரமும் நிறுவனத்தினுள் இருக்காது. அவருடன் பணிபுரியும் அனைவருக்கும் அவரைப் பிடிக்கும் திறமையும் இருக்கும். கஷ்டப்பட்டு பணி செய்வார். ஆனால், பெரிய வெற்றிகளை அவர் கண்டிருக்க மாட்டார். ஏன் தெரியுமா?

கஷ்டப்பட்டு வேலை பார்ப்பதற்கான பரிசு, அதிக வேலையே தவிர, வேறொன் றுமில்லை. எல்லாக் கஷ்டமான வேலை களும் அவரை நோக்கி வரவே செய்யும். அதை விடுங்கள். இது தவிர, நிறைய வெற்றிகரமான அதே நேரம் ஸ்மார்ட் டானவராக இல்லாமல் நல்ல பண்பாளராக வும் இல்லாமல் இருக்கும் பல நிர்வாகிகள் நிறுவனங்களில் இருக்கவே செய்வார்கள்.

இதில் இன்னொரு முக்கியமான விஷ யம் என்ன தெரியுமா? இவர்களே பதவி உயர்வு என்று வரும்போது அதற்காக பரிந்துரைக்கப்படு வார்கள். வெற்றிகரமான ஸ்மார்ட்டானவர்கள்மற்றும்பண்பானவர்கள் ஓரங்கட்டப்பட்டு இவர்களுக்கே பதவி உயர்வு கிடைக்கும். 'என்னடா இது! ஸ்மார்ட்னஸ் மற்றும் பண்பு ஆகிய இரண்டும்வெற்றிக்குத்தேவை என்கிறோம். ஆனால், வேலையில் மேலே போக இது உதவவில்லையே? ஏதோ ஒன்று மிஸ் ஸிங் ஆகிறதே என்று நினைக்கத் தோன்றும். அப்படி மிஸ்ஸாகும் ஒன்று எது என்று கேட்டால், அதுதான் அலுவலக அரசியல்தான்!

PQ என்பது என்ன? அதில் பெரும்பங்கு அதிகாரத்தை எப்படிக் கைப்பற்றுவது என்ப தைத் தெரிந்து வைத்திருப்பதாகும். மேலும், அதிகாரத்தை உபயோ கித்து எப்படி காரியங் களை நிகழ்த்துவது என்கிற சூட்சுமமும் அவர்க ளுக்குத் தெரிந்திருக்கும். இதுதான் நிர்வாகம் என்பது. ஏனென்றால், ஒரு நிர்வாகிக்கு அடுத்தவர்கள் மூலம் காரியங்களை நிகழ வைக்கத் தெரிந்திருக்க வேண்டும். இது நிர்வாக வியலின் இதயம் போன்றது.

எல்லா நிர்வா கிகளிடமும் கொஞ்சம் 'அலுவலக அரசியல்' என்பது இருக்கவே செய்யும். முந்தைய காலத்தில் இந்த 'அலு வலக அரசியல்' என்பது பெரிய அளவில் தேவை இல்லாமல் இருந்தது. நிர்வாகிகளிடம் இருந்து வரும்கட்டளை மட்டுமே போதுமானதாக இருந் தது. இன்றைய உலகில் தட்டையான நிர்வாக அமைப்பு கொண்ட நிறுவனங் களில் அதிகாரப்பரவல் என்பது அதிக அளவில் இருப் பதால், இது குறித்த குழப்பம் அதிக அளவில் இருக்கவே செய்கிறது.




அந்தக் காலத்தில் நிர்வாகிகளின் பணி மற்றவர்கள் வாயிலாக காரியங்களைச் செய்து முடிப்பது எனில், இன்றைக்கு நிர்வாகிகளின் பணியானது அவருக்கு நேரடியாக கட்டுப்பாடு இல்லாத மற்றும் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காத நபர்களின் வாயிலா கவும் காரியங்களை நிகழ்த்த தெரிந்திருப் பதுதான்.

குழப்பமன, கடினமான மற்றும் சிக்கலான நிர்வாக அமைப்புகளில் எப்படி காரியங்களை மற்றவர்கள் வாயிலாக நிகழ்த்திக் காட்டுவது என்பதில்தான் இன்றைய நிர்வாகிகளின் திறமையே இருக்கிறது. ஏனென்றால், உலகம் அந்தளவுக்கு மாறிவிட்டது. குறிப்பாக, ஒரு நிர்வாகியாக ஒரு காரியத்தை செய்ய நினைக்கும்போது எப்படி செய்வோம் என்று நினைக்காமல், யார் மூலம் இதைச் செய்வோம் என்று நினைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இதனால் இன்றைக் குக் காரியங்களை நிகழ்த்த பல கூட்டணி களை நிறுவனத்துக்குள் அமைத்து, அதி கார எல்லைக்கு உட்படாத நபர்களிடம்இருந் தெல்லாம் உதவிகளைத் தங்கு தடை யின்றி பெற்று இயங்க வேண்டியுள்ளது.

இதில் கொடுமையான விஷயம், ஒரு நிர்வாகியாக ஒருவர் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்கத் தேவை யான வளங்கள் அவர் பணி செய்யும் நிறுவனத்தில் இல்லாமல் கூட இருக்க லாம். முன்பு வேலை பார்த்த நிறுவனத் தில் உதவிகேட்டு நிறுவனத்துக்கு வெளியே இருக்கும் நட்புவட்டத்தை உபயோகித்துக் கூட சில நேரங்களில் செயல்பட வேண்டியி ருக்கும்.

இந்த மாதிரியான ஒரு நிர்வாகவியல் புரட்சி, இன்றைய உலகில் நடக்கிறது. ஒரு நிர்வாகியாக நீங்கள் இதற்குத் தயாராக வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஒரு நிர்வாகிக்கு வெளி உலகத்தில் உள்ள சவால்களைக்காட்டிலும் அவர் பணிபுரியும் இடத்தில் அடுத்து அமர்ந்திருக்கும் நபர் தருகிற சவால்களே மிகப் பெரிதாக இருக்கின்றன" என்கிறார் ஆசிரியர்.

ஒரு நிர்வாகியாக நவீன யுகத்தில் எப்படிச் சிக்கல்களைக் கையாள்வது, மனரீதியாக எப்படி பக்குவமாக நடந்து கொள்வது, அலுவலக அரசியலுக்கு இடையே எப்படி அதிகாரத்தைக் கைப்பற்றி தக்க வைத்துக் கொள்வது, உங்களுக் கென்று ஒரு தனி திட்டத்தை எப்படி உருவாக்கிக்கொண்டு செயல்படுவது என்பது குறித்தெல்லாம் எளிய நடையில் தெளிவாக விளக்கும் இந்தப் புத்தகத்தை நிர்வாகிகள் அனைவரும் அவசியம் படித்துப் பயன் பெறலாம்.




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2024இல் வெளியிடப்பெற்றது.